


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524
















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN

# உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் சுதந்திர சுயம் வீச்சு செய்யும் இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

Canadian Media Circulation Audit

$1.00

416-752-1524 www.uthayannews.ca

உதயம் 1585 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 21, 2026



## தந்தை செல்வாவின் சிரார்த்த தின நிகழ்வு குறித்து ஊழல்வாதியான செந்தில் தொண்டமானை பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீதரன் சந்தித்தது ஏற்புடையது அல்ல!

### பல தரப்புக்களிலிருந்து எழுந்துள்ள கண்டனங்கள்

தந்தை செல்வாவின் 50 வது சிரார்த்த தின நிகழ்வை முன்னிட்டு, ஊழல்வாதியும் ஏமாற்றுப் பேர்வழியுமான செந்தில் தொண்டமானை பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீதரன் சந்தித்தது ஏற்புடையது அல்ல என பல தரப்புக்களிலிருந்து எழுந்துள்ள கண்டனங்களால் தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் விமர்சனங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தலைமையகத்தில் 20ம் திகதி அன்று வியாழக்கிழமை மேற்படி சந்திப்பு இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. இது குறித்து இன்னும் சூடான கருத்து மோதல்கள் இடம்பெறலாம் எனவும் அறியப்படுகின்றது. (தொடர்ச்சி 5ம் பக்கம்)



## இவ்வருடத்திற்கான "தமிழர் தெருவிழா" என்னும் பெருவிழாவை கொண்டாடி மகிழ மார்க்கம் நகரில் ஒன்றுகூடவுள்ள தமிழ்க் கனடியர்களும் கலைஞர்களும்




கனடிய தமிழர் பேரவையானது மார்க்கம் நகரசபையின் அனுசரணையுடன் நடத்தவுள்ள இவ்வருடத்திற்கான "தமிழர் தெருவிழா" எதிர்வரும் கொண்டாடி மகிழ மார்க்கம் நகரில் ஒன்றுகூடவுள்ள தமிழ்க் கனடியர்களும் கலைஞர்களும் மற்றும் வர்த்தகப் பெருமக்களும் அரசியல் தலைவர்களும் மேற்படி தெருவிழாவை ஒரு வெற்றி விழாவாக நிறைவு செய்ய உதவுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. "மேற்படி தமிழர் தெருவிழா" நாளை சனிக்கிழமை 22ம் திகதியும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 23ம் திகதியும் நடைபெறவுள்ள மார்க்கம் நகரின் தெருப் பகுதியானது **Birchmount Road between 14th Avenue and Enterprise Blvd** ஆகும்.
(உள்ளே 13ம் பக்கத்தில் விளம்பரத்தைப் பார்க்கவும்)

## ஸ்காபுறோவில் Finch – Markham வீதிகளின் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள Medcentre Family Clinic வைத்திய நிலையத்தில் தமிழ் பேசும் வைத்தியர் பணியாற்றுகின்றார்




ஸ்காபுறோவில் **Finch/Markham** வீதிகளின் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள **Medcentre Family Clinic** வைத்திய நிலையத்தில் தமிழ் பேசும் வைத்தியர் ஒருவர் தற்போது பணியாற்றுகின்றார். கனடாவில் மருத்துவப் பயிற்சி பெற்று சுமார் 7 ஆண்டுகள் குடும்ப மருத்துவராகப் பணியாற்றிய அனுபவத்துடன் டாக்டர் விஜிதா முகுந்தன் அவர்களே இங்கு பணியாற்றும் சிறந்த வைத்தியர் ஆவார்.

வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும் இந்த வைத்திய நிலையத்தை தொடர்பு கொள்ள 416 297 7777 என்னும் இலக்கத்தை அழைக்கலாம். (உள்ளே 2ம் பக்கத்தில் விளம்பரத்தைப் பார்க்கவும்)









# Medcentre Health

Synchronizing Health Sectors

# Medcentre Family Clinic

## ACCEPTING NEW PATIENTS

# புதிய நோயாளர்கள்

## ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள்

## Dr. விஜிதா முகுந்தன் MD, CCFP

கனடாவில் மருத்துவப்பயிற்சி பெற்று 7 ஆண்டு கனடாவில் குடும்ப மருத்துவராக பணியாற்றியவர்.

## அழையுங்கள் : 416-297-7777

**எமது மருத்துவ நிலையம் தினமும் திறந்திருக்கும்**

## எமது சேவைகள்

**Medcentre Family Clinic**
Comprehensive Care
Patient-Centred Care
For Children, Adults & Seniors
416-297-7777

**Medcentre Urgent Care**
Urgent Care Centre
Walk-In Clinic
Life Lab Collection Centre
416-297-7777

**Medcentre Pharmacy**
Same-day Home delivery
All Insurances Accepted
Pharmacist Consultation
416-609-3333

**Medcentre Women's Health Care**
Cancer Screening (Cervical & Breast)
Family Planning (Contraception)
Sexually Transmitted Infections (STI)
416-331-8888

2225 Markham Road, Ground Floor, Scarborough, ON M1B 2W4

## (Markham Rd. & Finch Ave.E)

medcentrehealth.com

# கதிரோட்டம்

## யூலைப் படுகொலைகளின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டை, உணர்வுகளைப் பகிர்ந்த வண்ணம் நாம் கடந்தாலும் தொடர்ச்சியான கடமைகள் உள்ளதையும் அறிவோம்!

யூலை 1983 என்னும் அந்த "கொடிதானதும் துயரும் பயங்கரமும் நிறைந்த அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களையும் இழப்புக்களையும் நினைவில் நிறுத்தி இந்த யூலை மாதத்தின் இறுதி நாளை நாம் இன்று அடைந்துள்ளோம். எனினும் இந்த யூலை கொடுமைகளை மறந்து விடாமல் மனதில் நிறுத்தி அந்த நினைவுகளுடன் நாம் எப்போதும் ஒன்றியிருப்போம் என்று உறுதியும் எடுத்துக் கொள்வோம்.

தற்கால உலக அரசியலில் இனம் மற்றும் மொழிகளின் அடிப்படையில் மக்களை கூறுபோடுவதில் அரசியல்வாதிகள் தங்கள் காய்களை நகர்த்திய வண்ணம் தங்கள் பதவிகளை எப்போதும் தக்கவைத்துக் கொள்ளவே முயல்வார்கள். குறிப்பாக முதலாளித்துவப் போக்குள்ள அரசியல்வாதிகள் அந்த தேசத்தின் மக்களில் விவசாயிகளாகவும் தொழிலாளர்களாகவும் உள்ள மக்களை இனம் மற்றும் மதம் சார்ந்து பிரித்து வைப்பதே தங்கள் முதற்பணி என்பதை கவனித்துச் செய்வார்கள்.

அவ்வாறு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களை மதம் மற்றும் மொழி சார்ந்து பிரிந்து நிற்கச் செய்தால் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டம் என போராடும் சக்தியை அந்த உழைக்கும் வர்க்கம் குறைத்துக் கொள்ளும் என்ற உண்மையை முதலாளித்துவம் சார்ந்து தங்கள் அரசியலை நகர்த்திச் செல்லும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு அரசியல் காய் நகர்த்தல்களே இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமாக விளங்கியது. இதனால் தான் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் உழைக்கும் மக்கள் என்ற ஒரே வர்க்கமாக தங்கள் உரிமைகளுக்காக போராடியவர்கள் பின்னாளில் மொழிசார்ந்தும் மதம் சார்ந்தும் பிரித்தாளப்பட்டார்கள். இதன்" விளைவாக இலங்கையில் இனவாதம் இருப்பக்கங்களிலும் பிரயோகிக்கப்பட நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறான திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்திரத்தில் முக்கியமானவர்களாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்க மற்றும் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அடங்கிய பல சிங்கள தேசிய அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகளும் கைகோர்த்து நின்றார்கள் என்பதை சாதாரண தமிழ் மற்றும் சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்களும் இனவாதச் சேற்றில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக இயற்கை வளங்களையும் சாதகமான கால நிலையையும் கொண்ட இலங்கைத்தீவில் அமைதி இன்மை ஏற்பட இனவாதம் காரணமாக விளங்கியது. பெரும்பான்மை இன சிங்கள மக்களை திருப்திப் படுத்தும் வகையில் சிங்களத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி பதவிக்கு வந்து மாணவர்களின் பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். குறிப்பாக தமிழ் மாணவர் பேரவை" போன்ற மாணவர்களின அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துவதற்காக மாணவர்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டினார்கள். அப்போது அந்தப் போராட்டங்களை அடக்கும் வகையில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றைச் செய்ய இலங்கைப் பொலிசாருக்கு அரசாங்கங்கள் அழுத்தங்கள் கொடுக்கத் தொடங்கின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளா டேவிற்சன் மற்றும் பொன் சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வாறான மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டங்களே பின்னாளில் ஆயுதங்கள் ஏந்திய போராட்டங்களாகவும் தாக்குதல்ககளாகவும் மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களை தமிழ் மக்களும் வரவேற்று தங்கள் ஆதரவை வழங்கினார்கள். தமிழ் மக்களுக்காக விடுதலையைப் பெற்றுக்கொள்ள் "ஆயுதப் போராட்டம்" ஒன்றே உகந்தது என்பதை மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் ஏற்றுக்கொணடார்கள்.

இந்த போராட்ட வடிவத்தின் வளர்ச்சியானது 1983ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்தப்பெற்ற தாக்குதலில் 23 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட இந்த சம்பவம் சிங்கள அரசியல்வாதிகள் பலரையும் சில தமிழ் அரசியல்வாதிகளையும் அதிரச் செய்தது. சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதற்கு இனவாத சாயம் பூசப்பட்டு பின்னர் அது இனக்கலவரமாக வெடித்தது. அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு வார காலத்திற்கு இலங்கை எங்கும் நடத்தப்பெற்ற இனவாதக் கொலைகளே இன்றும் நாம் 43 வது ஆண்டாக நினைவு கூர்கின்ற ஒரு துயரங்கள் நிறைந்த நினைவுகளாக எம்மோடு பயணிக்கின்றது. பின்னரும் தொடர்ச்சியாக நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இரையாகிப் போன எம் உறவுகளை நாம் உருக்கத்துடன் நினைவு கூறும் இந்த யூலைப்படுகொலை அனுஸ்டிப்பை நாம் அனைவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கடந்து செல்வோம்!

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

JJ Rental
கதிரை மேசை வாடகைக்கு
416.553.1540 | 647.960.1415



உங்கள் வீட்டு வைபவங்களுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள், பார்க் ஒன்றுகூடலுக்கு வேண்டிய கதிரைகள், மேசைகள், TENTS, BBQ மிஷின் GAS அடுப்புகள் அனைத்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
416.553.1540 | 647.960.1415

**Room for Rent**

**McCowan & 401** அருகில், **Luxury 2 Bed, 2 Bath Condo** ல் ஒரு தனி அறை **with separate bathroom, Aug 1, 2026** முதல் வாடகைக்கு உள்ளது. **Share the kitchen & living area with a Tamil senior male. Gym, Swimming pools, Tennis, BBQ area, and more. Preference given to single Tamil male. Contact. 647 273 2053**

**வேலை வாய்ப்பு**

தொழிற்சாலை ஒன்றில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. தொடர்புகளுக்கு: 647-669-2739

**Line Cook wanted for an Italian Restaurant**

Toronto நகரில் Church வீதி / Wellesley வீதி சந்திப்புக்கு அருகில் உள்ள இத்தாலிய உணவகம் ஒன்றிக்கும் உடனடியாக Line Cook ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு Kumar 416 409 9450 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

**இளவயது ஆண் ஒருவரைப் பராமரிக்க உதவியாளர் தேவை**

சிறப்புத் தேவைகள் (SPECIAL NEEDS) கொண்ட 26 வயதுடைய ஆண் ஒருவரைப் பராமரிக்கவும் கவனித்துக்கொள்ளவும் ஆண் ஒருவர் தேவை. அவருடன் வீட்டிலேயே தங்கியிருந்து தினசரித் தேவைகளுக்கு உதவி செய்து அன்புடனும் பொறுமையுடனும் கவனித்துக் கொள்ளக் கூடிய ஒருவரையே நாம் எதிர்பார்க்கின்றோம். தகுதியும் அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் நல்ல சம்பளமும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் 416.892.3249 என்னும் தொலைபேசி இலக்கத்தில் அழைக்கவும். அழைப்பு கிட்டாவிட்டால் தங்கள் தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்தால் உதவியாக இருக்கும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அநுர அரசாங்கத்தின் மீதான மக்கள் ஆதரவு வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றதா?






சுயாதீன அமைப்பான "வெரிடே ரிசேர்ச்" நிறுவனத்தால் நடத்தப்பட்ட அண்மைய 'Mood of the Nation' (நாட்டின் மனநிலை) தொடர்பான கருத்துக் கணிப்பின்படி, இலங்கையின் பொருளாதார நிலைமைகள் குறித்த அதிகரித்து வரும் கவலைகள் பொதுமக்கள் மத்தியில் தாக்கம் செலுத்தி வருவதால், அரசாங்கத்தின் மீதான மக்களின் ஆதரவு தேர்தலுக்குப் பிந்தைய உச்சநிலையான 65 வீதத்திலிருந்து 50 வீதமாகக் குறைந்துள்ளது.

ஜூலை 2026 இல் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பில், அரசாங்கத்திற்கான ஆதரவு 49.83 வீதமாகப் பதிவாகியுள்ளது. இது கடந்த பெப்ரவரியில் பதிவான 65 வீதத்திலிருந்து கணிசமாகக் குறைந்துள்ளது.

பொருளாதார முன்னேற்றம் குறித்த மக்களின் பார்வையில் ஏற்பட்டுள்ள அதிருப்தியே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என அக்கருத்துக் கணிப்பு சுட்டிக்காட்டுகிறது.

பொருளாதார நிலைமைகள் மேம்பட்டு வருகின்றன என்று நம்பும் பதிலளிப்பாளர்களின் எண்ணிக்கை, முந்தைய கணிப்பில் 64 வீதமாக இருந்த நிலையில் தற்போது 41.63 வீதமாகக் குறைந்துள்ளது.

அதேவேளை, பொருளாதாரம் "மோசமடைந்து வருகிறது" என்று நம்புபவர்களின் சதவீதம், முன்னர் இருந்த சுமார் 15 வீதத்துடன் ஒப்பிடுகையில் தற்போது 40.29 வீதமாக உயர்ந்துள்ளது.

கருத்துக் கணிப்பில் பங்கேற்றவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர், அதாவது 55.59 வீதம் பேர், தற்போதைய பொருளாதார நிலையை "மோசமானது" என மதிப்பிட்டுள்ளனர். வெறும் 38 வீதம் பேர் மட்டுமே பொருளாதார நிலைமை "நல்லது" அல்லது "மிகச்சிறந்தது" எனக் கருதுகின்றனர்.

பொருளாதார மனநிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம், வெரிடே ரிசர்ச்சின் "பொருளாதார நம்பிக்கைச் சுட்டெண்ணையும்" (Economic Confidence Index) எதிர்மறை நிலைக்குத் (Negative territory) தள்ளியுள்ளது.

அண்மைய கணிப்பில் இச்சுட்டெண் -8 ஆகப் பதிவாகியுள்ளது. 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் -39 ஆக இருந்த இச்சுட்டெண், 2025 பெப்ரவரிக்குப் பிறகே நேர்மறை நிலைக்கு நகர்ந்திருந்தது.

அரசாங்கத்தின் மீதான அதிருப்தியும் அதிகரித்துள்ளது. கருத்துக் கணிப்பில் பங்கேற்றவர்களில் 31.40 வீதம் பேர் தற்போதைய அரசாங்கம் செயல்படும் விதம் குறித்துத் தங்களுக்கு அதிருப்தி இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த 'Mood of the Nation' கருத்துக் கணிப்பானது, ஜூலை 11 முதல் 30 வரை நாடு தழுவிய ரீதியில் தேர்ந்தெடுக் கப்பட்ட 2,013 வயது வந்தோரிடம் நடத்தப்பட்டது.

Vanguard Survey (Pvt) Ltd என்ற நிறுவனத்தின் பங்களிப்புடன் நடத்தப்பட்ட இக்கருத்துக் கணிப்பானது, 95 வீதம் நம்பிக்கையின் மட்டத்தில் அதிகபட்சமாக ±2.21 வீதம் மாதிரிப் பிழை வரம்பைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் நடத்தவுள்ள "செயற்கை நுண்ணறிவு இலவசப் பயிற்சி" அமர்விற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



புதிய உலகளாவிய தொழில்நுட்பப் புரட்சிக்கேற்ப இளைஞர்களைத் தயார்ப்படுத்தும் நோக்குடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் செயற்கை நுண்ணறிவுப் பயிற்சி அமர்வொன்றை எதிர்வரும் ஆகஸ்ட் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்த உள்ளது. இது தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்,

டிஜிட்டல் யுகத்தின் புதிய ஆயுதமான செயற்கை நுண்ணறிவை (Artificial Inteligence – AI) கல்வி, வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அன்றாட வாழ்வில் எவ்வாறு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தவது என்பது பற்றிய பயிற்சி அமர்வு ஒன்றை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் எதிர்வரும் ஆகஸ்ட் 22ஆம் திகதி (சனிக்கிழமை) நடாத்த உள்ளது.

இப் பயிற்சி அமர்வு வயாவிளான் குட்டியப்புலத்தில் பிள்ளையான் காடு வீதியில் அமைந்துள்ள கரிசல் பூங்காவில் காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை முற்றிலும் இலவசமாக நடைபெறவுள்ளது. எதிர்கால வேலைச் சந்தையில் செயற்கை நுண்ணறிவின் ஆதிக்கம் மற்றும் அதன் புதிய பயன்பாடுகள் குறித்து துறைசார் வல்லுநர்களால் விரிவாகக் கற்றுத்தரப்படவுள்ள இப் பயிற்சியில் க.பொ.த உயர்தரம் பூர்த்தி செய்த மற்றும் இளம் தொழில்முனைவோர் கலந்துகொள்ளலாம்.

பங்குபெற விரும்புபவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பாக தங்களின் முழுப்பெயர், வயது மற்றும் முகவரியை 0741471759 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு வாட்ஸ் அப் (What's App) மூலம் தெரிவித்து விண்ணப்பித்தல் வேண்டும். இவர்களில் இருந்து பொருத்தமான 100பேர் தெரிவுசெய்யப்பட்டுப் பயிற்சியில கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். தெரிவுசெய்யப்படுபவர்கள் பயிற்சியின்போது மடிக்கணனி அல்லது திறன் கைத்தொலைபேசி ஒன்றை எடுத்து வருதல் கட்டாயமானதாகும். பயிற்சி அமர்வின் இறுதியில் கலந்துகொண்டவர்களுக்குப் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும். மேலதிக விபரங்களை 0777969644 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் வாக்குமூலம் பதிவு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கொழும்பு மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு பேர் 17ம் திகதி திங்கட்கிழமை அன்று தங்களது வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர்.

முதலாவது குற்றஞ்சாட்டப்பட்டவரான மொஹமட் இப்ராஹிம் மொஹமட் நவ்ஃபர் மௌலவி, அல்லது அபு செயித்/அபு ஷாரிம், 20ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவரான செய்னுல் ஆப்தீன் மொஹமட் ஜசீம், 21,22,23 மற்றும் 24ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவர்களான மொஹமட் முஸ்தபா மொஹமட் ரிஸ்வான், மீரா சைப் மொஹமட் நப்லி எனப்படும் அபு சானா/நப்லி பிரதர், மொஹமட் அமீர் மொஹமட் அயன் துல்லா எனப்படும் அபு ஐஸ் இப்ராஹிம், மொஹமட் அன்சார்தீன் மொஹமட் இல்மி எனப்படும் ஹில், மற்றும் 25ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவரான மொஹமட் அக்ரம் அஹக்காம் ஆகியோரே தங்களது வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர்.

இந்த குற்றஞ்சாட்டப்பட்ட அனைவரும் குற்றவாளிகள் நிற்கும் கூண்டில் இருந்தவாறே தங்களது வாக்குமூலங்களை வழங்கியதாக, குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகும் சட்டத்தரணிகள் குழுவைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் பல வழக்குகளில் முக்கியமானதும் சிறப்புமிக்கதுமான இந்த மூவரடங்கிய சிறப்பு மேல் நீதிமன்ற வழக்கில், மொத்தம் 25 பேர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

அவர்களில் 17ஆவது குற்றஞ்சாட்டப்பட்டவரான யாசிஸ் பாவா அப்துல் ரவூப், சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதே உயிரிழந்தார்.

சட்ட மற்றும் சமூக ரீதியாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்த சிறப்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் 23,000க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 2023 ஒக்டோபர் 10ஆம் திகதி ஆரம்பமான அரசுத் தரப்பு சாட்சிய விசாரணையில், 250க்கும் மேற்பட்ட நாட்களில் 500க்கும் அதிகமான சாட்சிகளிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நவரத்ன மாரசிங்க (தலைவர்), சுஜீவ நிஸ்ஷங்க மற்றும் ராமநாதன் கண்ணன் ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய குழாம் முன்னிலையில் விசாரிக்கப்படும் இந்த சிறப்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற வழக்கு, வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் தினமும் 10 மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ச்சியாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இந்த வழக்கை முடித்து தீர்ப்பு வழங்கப்பட வேண்டிய காலப்பகுதி குறித்து பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், இந்த வழக்கு விசாரிக்கப்படும் நீதிமன்ற நடைமுறை தொடர்பில் அதிருப்தி தெரிவித்த பல சட்டத்தரணிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வழக்கிலிருந்து விலகியுள்ளனர். அவ்வாறு விலகிய அனைத்து சட்டத்தரணிகளும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கையின் முன்னணி சட்டத்தரணிகளாகவும், ஜனாதிபதி மற்றும் மனித உரிமை வழக்குகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

# இலங்கையின் வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 6 இரத்த சுத்திகரிப்பு கருவிகளை வழங்கிய கனடா "நிவாரணம்" அமைப்பு புகழ் செந்தில்குமரன்



கனடா வாழ் "நிவாரணம்" புகழ் செந்தில்குமரன் அவர்களது மனித நேயப் பணிகள் கடந்த பல வருடங்களாக இலங்கையைச் சென்றடைந்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு பலன்கள் பல கிட்டியுள்ளன.

அந்த வரிசையில் கடந்த வாரம் இலங்கையின் வடக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 6 இரத்த சுத்திகரிப்பு கருவிகளை வழங்கிய கனடா "நிவாரணம்" அமைப்பு புகழ் செந்தில்குமரன் அந்த வைபவத்திற்கு அழைக்கப் பெற்றிருந்த இலங்கைக்கான கனடியத் தூதுவர் மற்றும் வடக்கு மாகாண ஆளுனர் ஆகியோர் முன்னிலையில் 83 ஆயிரத்து 500 டாலர்கள் பெறுமதியான மேற்படி கருவிகளை உரியவர்களிடம் வழங்கினார். அங்கு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுனர் வேதநாயகன் அவர்கள் இந்த அன்பளிப்பு எத்தனையோ நோயாளிகளின் வாழ்க்கைக்கு உதவப் போகின்றது என்றும் இது ஒரு"உயர்ந்த மனித நேயப்பணி" என்றும் புகழாரம் சூட்டினார்.

இந்த கையளிப்பு வைபவம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் நடைபெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தந்தை செல்வாவின் சிரார்த்த தின நிகழ்வு குறித்து ஊழல்வாதியும் ஏமாற்றுப் பேர்வழியுமான செந்தில் தொண்டமானை MP ஸ்ரீதரன் சந்தித்தது ஏற்புடையது அல்ல!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



## பல தரப்புக்களிலிருந்து எழுந்துள்ள கண்டனங்கள்!

தந்தை செல்வாவின் 50வது சிரார்த்த தின நிகழ்வை முன்னிட்டு, ஊழல்வாதியும் ஏமாற்றுப் பேர்வழியுமான செந்தில் தொண்டமானை பாராளுமன்ற உறுப்பினர், ஸ்ரீதரன் சந்தித்தது ஏற்புடையது அல்ல என பல தரப்புக்களிலிருந்து எழுந்துள்ள கண்டனங்களால் தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் விமர்சனங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தலைமையகத்தில் 20ம் திகதி அன்று வியாழக்கிழமை மேற்படி சந்திப்பு இடம்பெற்றதாக அறியப்படுகின்றது. இது குறித்து இன்னும் சூடான கருத்து மோதல்கள் இடம்பெறலாம் எனவும் அறியப்படுகின்றது.

இந்த சந்திப்புக்கு பின்னால் இருவருக்கும் சுய விருப்பங்கள் இருந்திருக்கலாம் என்றும் ஆனால் இதன் மூலம் தமிழர் அரசியலில் மேலும் பிரிவுகளும் சச்சரவுகளும் அதிகரிக்கலாம் எனவும் கருத்துப்பகிர்வுகள் இடம்பெற்றுள்ளன.

ஊழல் பேர்வழியான செந்தில் தொண்டமான் கிழக்கு மாகாண ஆளுனராக ரணில் விக்கிரமசிங்க என்னும் ஊழல் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்ட பின்னர் அந்த பதவிக்காலத்தில் பல நிதி மோசடிகளும் கிழக்கில் இடம்பெற்றுள்ளன என்னும் காணிகள் பல பிற மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக தற்போதைய அரசாங்கம் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது என்றும் கிழக்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.!

எனவே விரைவில் நீதி மன்ற விசாரணைகளை எதிர்கொள்ளவுள்ள ஒருவரை தந்தை செல்வாவின் நினைவு வைபவங்களில் இணைத்துக் கொள்வது எந்தவகையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற கேள்விகளும் எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க்து.

# இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் சிறீதரன் எம்.பி. ஆகியோர் திடீர் சந்திப்பு!

**- ந.லோகதயாளன்**

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் 19ம் திகதி நடைபெற்றது.

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்ட முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

சமகால அரசியல் நிலவரங்கள்:

தற்போதைய அரசியல் சூழல் மற்றும் தமிழ் மக்களின் முக்கியப் பிரச்சினைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்:

நீண்டகாலமாக இழுபறி நிலையில் உள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதன் அவசியம் மற்றும் அதன் மூலம் அதிகாரப் பரவலாக்கலை உறுதிப்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.



பொருளாதார அபிவிருத்தி:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் உள்கட்டமைப்புத் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி சார்ந்த பிற முக்கிய விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

துறைமுக மேம்பாடு:

வட பிராந்தியத்தின் வர்த்தக மற்றும் போக்குவரத்து மையமாகத் திகழும் காங்கேசந்துறை துறைமுகத் திட்டங்களின் தற்போதைய நிலைமை மற்றும் அதனை மேலும் விரிவுபடுத்தி பிராந்திய தொடர்பாடலை வலுப்படுத்துவது தொடர்பாகவும் ஆரோக்கியமான கலந்துரையாடல் நடைபெற்றது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை ஊடக வரலாற்றில் முதற் தடவையாக அதிகளவு தமிழ், முஸ்லிம் ஊடகர்களுக்கான உதவித் திட்டம் அரங்கேறியது!



இலங்கை ஊடக வரலாற்றில் ஒரே தடவையில் அதிக நாட்டின் பல மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணினிகள், செல்போன்கள் வழங்கிய வரலாற்று சாதனையை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் படைத்துள்ளது.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உறுப்பினர்களான ஊடகவியலாளர்களுக்கு இலவசமாக இலத்திரனியல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு வெள்ளவத்தை தனியார் ஹோட்டலில் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றபோதே இலண்டனின் பிரபல தொழிலதிபரும் பிரபல சமூகசேவையாளருமான சீவரட்ணம் முரேஸின் நிதி அனுசரணையில் 65 ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணினிகளும் 25 ஊடகவியலாளர்களுக்கு செல்போன்களும் என சுமார் 1.5 கோடி ரூபா மதிப்புள்ள இலத்திரனியல் உபரணங்களை வழங்கியே இந்த வரலாற்று சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீகஜன், செயலாளர் கே.ஜெயந்திரன் ஆகியோர் தலைமையில் நாட்டிய கலைமணி ஸ்ரீமதி பவானி குகப் பிரியாவின் நெறியாள்கையில் தியாகராஜ கலைக்கோவில் மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலண்டனின் பிரபல தொழிலதிபரும் பிரபல சமூகசேவையாளருமான சீவரட்ணம் முரேஸ் பங்கேற்றார்.

சீவரட்ணம் முரேஸின் இந்த உதவிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கு ஆளுயர மலர்மாலைகள், தலைக்கிரீடம் அணிவிக்கப்பட்டும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன. அவரின் சமூக சேவைகளை பாராட்டி பாராட்டுக் கவிதை காணொலியும் வெளியிடப்பட்டது.

அவர் தனது உரையின்போது தான் சிறு வயதில் பட்டதுன்பங்கள், வறுமையில் வாடிய தனது தாயார் தன்னை வளர்க்க பட்ட கஷ்டங்களை மிகவும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தினார்.

சிறப்பு விருந்தினர்களாக எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் பிரைவேட் லிமிட்டெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரியான எம்.செந்தில்நாதன், மும்பு தேசிய வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் த.வீரசுதன் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன் முன்னாள் பிரதம ஆசிரியர்கள், மூத்த ஊடகவியலாளர்கள் பலரும் பங்கேற்றிருந்த இந்நிகழ்விலேயே இலண்டனின் பிரபல தொழிலதிபரும் பிரபல சமூகசேவையாளருமான சீவரட்ணம் முரேஸின் நிதி அனுசரணையில் நாட்டின் பல மாவட்டங்களையும் சேர்ந்த 90 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் செல்போன்கள் வழங்கப்பட்டன.







# வடக்கு கடற்பகுதியில் நிலவும் இந்திய - இலங்கை மீன்பிடி நெருக்கடி குறித்த அநுர அரசின் நிலைப்பாட்டில் மாற்றம்



இலங்கையின் கடல் வளங்களை சூறையாடும் இந்தியக் கப்பல்கள் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் தலைவர் மட்டத்தில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தாமல் இருப்பது என்ற, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் கூட்டு பொறிமுறையொன்றை முன்மொழிந்து ஒரு வாரம் கடந்துள்ள நிலையில், இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து இழுவைப் படகுகள் மூலம் மேற்கொள்ளும் மீன்பிடியைத் தடுத்து நிறுத்துவதற்காக, எதிர்வரும் மாதங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், 2026 ஓகஸ்ட் 13ஆம் திகதி மன்னாரில் மீனவர் சங்கங்களின் தலைவர்களைச் சந்தித்தபோது, தெரிவித்துள்ளார். அதன் பின்னர், "கடற்படையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

"மீண்டும் இதனைப் பரிசீலிக்க வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் இதற்குப் பொருந்தும் அணுகுமுறையொன்றை முயற்சித்துப் பார்க்க வேண்டும். அந்த அணுகுமுறையின் அடிப்படையில், செப்டெம்பர் மாத இறுதியில் அல்லது ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் இந்தியா மற்றும் தமிழ்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அதற்கான அழைப்பும் எமக்கு கிடைத்துள்ளது".

மன்னார் மாவட்ட மீனவ சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நேரடியாக அடையாளம் கண்டு, அவற்றுக்கு நிரந்தர தீர்வுகளை வழங்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, மன்னார் மாவட்ட மீனவர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே, அந்தப் பேச்சுவார்த்தைகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப் படவுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மீனவர் சங்கத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

"அந்த அழைப்பின் அடிப்படையில், நாம் பார்ப்பது என்னவென்றால், இந்தியாவிற்குச் சென்று முதற்கட்டப் பேச்சுவார்த்தையை அதிகாரிகள் மட்டத்தில் நடத்தவுள்ளோம். அதாவது, மீன்பிடி அமைச்சில் உள்ள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை, மீனவர் சங்கங்களுக்கு இடையில் நடைபெறும். அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை அமைச்சகங்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையாக இருக்கும். இவ்வாறுதான் அவை பிரிக்கப்பட்டுள்ளன".

மன்னார் கடற்பரப்பில் மட்டுமன்றி, புத்தளம் கடற்பரப்பிலும் இந்திய மீன்பிடிப் படகுகள் அத்துமீறி நுழையும் சம்பவங்கள் இடம்பெறுவதாக, பத்தலங்குண்டுவைச் சேர்ந்த விக்ஸோப மாதா மீனவர் சங்கத்தின் செயலாளர் அன்டன் பொன்சேகா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

தங்களது பைபர் படகுகள், இரும்பினால் தயாரிக்கப்பட்ட இந்தியப் படகுகளுடன் மோதினால், அவை சேதமடைந்து விடும் அபாயம் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் முதலாவது இந்திய உத்தியோகபூர்வ விஜயம் நிறைவடைந்து இரண்டு வாரங்கள் கூட கடக்காத நிலையில், 2024 டிசம்பரில் இலங்கை அரசாங்கம், இலங்கையின் கடல் வளங்களைச் சுரண்டிச் செல்லும் இந்திய மீன்பிடிப் படகுகள் தொடர்பாக அரசியல் தலைவர்கள் மட்டத்தில் இனிமேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படமாட்டாது என அறிவித்திருந்தது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைவதைத் தடுப்பதற்கான அமைதியான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என இலங்கை கடற்படை, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவர் சங்கத் தலைவர்களுடன் நடைபெற்ற மன்னார் மாவட்ட மீனவர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

"இந்த இந்திய இழுவைப் படகுகள் தொடர்பான பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமா, முடியாதா என்பதை நாம் ஆராய வேண்டும். அதன்மூலம் அமைதியான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதையும் நாம் ஆராய வேண்டும். அதனை அடுத்தக்கட்ட நடவடிக்கையாக முன்னெடுக்க வேண்டும். அதன் முதற்கட்டமாக, பேச்சுவார்த்தை மூலம் செய்யக்கூடிய விடயங்களை மேற்கொள்ளும், அதேவேளை கடற்படையினரிடம் அவர்களது நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் பொறுப்பையும் நாம் ஒப்படைத்துள்ளோம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. எனவே, கடற்படையையும் ஓரளவு பலப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்".

மீனவ சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நேரடியாக அடையாளம் கண்டு, அவற்றுக்கு நிரந்தரத் தீர்வுகளை வழங்கும் நோக்கில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பல மாவட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மீனவர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் அமைச்சர் இந்த வாரம் கலந்துகொண்டிருந்தார்.

கொழும்பிற்கு ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, மீனவர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடியிருந்ததுடன், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும் படகுகளையும் விரைவாக விடுவிப்பதற்கு இலங்கையின் ஒத்துழைப்பையும் கோரியிருந்தார்.

"பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான இருதரப்பு பொறிமுறைகள் தொடர்ந்து செயற்பட்டு வரும் நிலையில், மீனவர்களின் வாழ்வாதாரத் தேவைகளைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான அணுகுமுறையொன்று எமது அணுகுமுறைக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்" என அவரது விஜயம் நிறைவடைந்ததையடுத்து, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஓகஸ்ட் 5ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் நரேந்திர மோடி மற்றும் அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற முதலாவது அரசத் தலைவர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் வடக்கின் மீனவர்கள் திருப்தியடையும் வகையிலான நிலையான தீர்வொன்று எட்டப்படாமல், நிறைவடைந்ததைத் தொடர்ந்து, மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் 2024 ஆம் ஆண்டு டிசம்பரில் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது, அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறைவடைந்துவிட்டதாகத் தெரிவித்திருந்தார்.

"இதற்குப் பின்னர் பேச்சுவார்த்தைகள் இல்லை. அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறைவடைந்துவிட்டன. இனிமேல் எவருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படமாட்டாது".

கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கும் இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படாது. எனினும் அந்த பேச்சுவார்த்தைகள் தொழில்நுட்பம், தொழில்சார் விடயங்கள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக மாத்திரமே தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது மேலும் தெரிவித்திருந்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கொலைகாரர்களிடம் நீதியை எதிர்பாராமல் சர்வதேச மாநாட்டுக்கு அணிதிரள்வோம் என அழைப்பு விடுக்கும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்!




எதிர்வரும் முப்பதாம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் யாழ். தந்தை செல்வா அரங்கில் இடம்பெறவுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சர்வதேச மாநாட்டுக்கு அனைத்து தரப்பினரும் அணிதிரண்டு பேர் ஆதரவை வழங்க வேண்டும் என வடக்கு கிழக்கு வழிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி கனகரஞ்சினி அழைப்பு விடுத்தார்.

18ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண. ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இறுதி யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை தேடி 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என தெரியாத நிலையில் தேடிக் கொண்டிருக்கிறோம்.

எமது உறவுகளை தேடிய போராட்டத்தில் சர்வதேச நீதியை எதிர்பார்த்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஐநா வரை எமது நீதிக்கான போராட்டத்தை இடைவிடாது தொடர்ந்து கொண்டிருக்கிறோம்.

தமிழ் மக்கள் மீதான கொடூர இன அழிப்பு இடம்பெற்ற பின் எமக்கான நீதியை இலங்கை அரசிடம் பல தடவைகள் எழுத்து மூலமாக கோரினோம் பதில் கிடைக்கவில்லை.

12 மேற்பட்ட ஆணைக்குழுக்களை சந்தித்தோம் எந்தப் பயனும் இல்லாத நிலையில் இலங்கை நீதித்துறை என்பது கொலைகாரர்களிடம் எமக்கான நீதியை எதிர்பார்க்க முடியாது என்ற உண்மையை உணர்ந்தோம்.

அதன் காரணமாக எமது உறவுகளைத் தேடிய போராட்டம் சர்வதேசத்தை நோக்கியதாக மாற்றப்பட்டு ஐநா 36 ஆவது கூட்டத் தடரில் இருந்து எமது உண்மைக்கும் நீதிக்குமான குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இலங்கையில இடம் பெற்றது இனப்படுகொலை என்ற உண்மையை சர்வதேசத்தின் வாயிலாக மனித உரிமைகளை மதிக்கின்ற நாடுகளூடாக எமக்கான நீதியை பெற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

எமது உறவுகளைத் தேடிய நீதிக்கான போராட்டத்தின் தொடர்ச்சியாக எதிர்வரும் முப்பதாம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் அன்று யாழ் தந்தை செல்வா அரங்கில் வடக்கு கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஒன்றிணைந்து சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

ஆகவே எமது உறவுகளை தேடிய போராட்டத்தின் சர்வதேச மாநாட்டை சிறப்பாக முன்னெடுப்பதற்கு சகல தரப்பினர்களிடமும் ஆதரவை எதிர்பார்ப்பதோடு உதவிகளையும் எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# நடிகர் இராஜ்குமார் மீட்பில் தமிழர்களின் பங்களிப்பை மறந்துவிட்ட சிவக்குமாருக்கு நெடுமாறன் ஞாபகப்படுத்துகின்றார்!

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கை

எந்தவித குற்றச்செயலிலும் ஈடுபடாத அப்பாவித் தமிழர்கள் மூவரைப் படுகொலை செய்துவிட்டு அதைத் திரையிட்டு மறைக்க கர்நாடக முதலமைச்சர் சிவகுமார் சிறிதளவும் மனசாட்சியில்லாமல் பேசுவதைப் பார்க்கும்போது, அண்ணல் காந்தியடிகள் தலைமை தாங்கி நடத்திய காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்தானா? என்ற ஐயம் எழுகிறது. முதலமைச்சர் போன்ற பொறுப்பான பதவிகளில் இவரைப் போன்றவர்கள் தொடர்ந்து இருக்க அனுமதிப்பது அவர் சார்ந்துள்ள கட்சிக்குப் பேரிழுக்காகும்.

"எங்கள் மாநிலத்தின் சட்ட ஒழுங்கை எவ்வாறு பாதுகாப்பது என்பது எங்களுக்குத் தெரியும். தமிழகத் தலைவர்கள் எங்கள் மாநில விவகாரத்தில் தலையிட கூடாது" எனக் கர்நாடக முதலமைச்சர் சிவக்குமார் கூறியுள்ளார்.

மேய்ச்சலுக்குச் சென்ற தங்கள் மாடுகள் திரும்பவில்லை என்பதற்காக அவற்றைத் தேடி காட்டுக்குள் சென்ற மூன்று தமிழர்களைக் கர்நாடக வனத்துறையினர் சுட்டுப் படுகொலை செய்திருப்பதைத் தமிழ்நாட்டு முதல்வரும், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கண்டித்திருக்கிறார்கள். இதுவொரு மனிதநேயப் பிரச்சனை. எந்த மாநிலத்திலும் மனிதநேயம் மீறப்படுமானால், அதைக் கண்டிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு.

2000ஆம் ஆண்டில் கர்நாடக எல்லைக்குள் கன்னட நடிகர் இராஜ்குமார் அவர்களை வீரப்பன் கடத்தி கர்நாடகக் காட்டுக்குள் சிறை வைத்திருந்தபோது, அப்போதைய கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணா அவர்கள் மூன்று முறை தமிழகத்திற்கு ஓடோடி வந்து அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களை இராஜ்குமாரை மீட்க உதவும்படி வேண்டிக்கொண்டார். அப்போது வீரப்பன் தமிழக முதல்வருக்கு அனுப்பிய செய்தியில் "நெடுமாறனை அனுப்பினால் பேசுவதற்குத் தயார்" என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கிணங்க தமிழக முதல்வர் என்னை வேண்டிக்கொண்டபடியும், கர்நாடக முதல்வர் கிருஷ்ணா என்னை அழைத்து என்னிடம் வேண்டிக்கொண்டபடியும், நானும், நக்கீரன் கோபால், கொளத்தூர் மணி, பேரா. கல்யாணி, சுகுமார் ஆகிய தமிழர்கள் காட்டுக்குள் சென்று ஐந்து நாட்கள் வீரப்பன் குழுவினரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்குப்பின் நடிகர் இராஜ்குமார், அவர் மருமகன் கோவிந்தராஜ் ஆகியோரை விடுவித்துப் பத்திரமாக அவர்களின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தோமே அந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது, "இது எங்கள் மாநிலப் பிரச்சனை தமிழர்கள் எதற்காக வருகிறீர்கள் என்று யாராவது கேட்டார்களா? அன்று நாங்கள் மனிதநேயத்துடன் செயல்பட்டிருக்காவிட்டால், இரு மாநிலங்களிலும் இனக்கலவரங்கள் மூண்டெழுந்து விரும்பத்தகாத நிகழ்ச்சிகள், படுகொலைகள் நடைபெற்றிருக்கும்".

எந்தவித குற்றச்செயலிலும் ஈடுபடாத அப்பாவித் தமிழர்கள் மூவரைப் படுகொலை செய்துவிட்டு அதைத் திரையிட்டு மறைக்க கர்நாடக முதலமைச்சர் சிவகுமார் சிறிதளவும் மனசாட்சியில்லாமல் பேசுவதைப் பார்க்கும்போது, அண்ணல் காந்தியடிகள் தலைமை தாங்கி நடத்திய காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்தானா? என்ற ஐயம் எழுகிறது. முதலமைச்சர் போன்ற பொறுப்பான பதவிகளில் இவரைப் போன்றவர்கள் தொடர்ந்து இருக்க அனுமதிப்பது அவர் சார்ந்துள்ள கட்சிக்குப் பேரிழுக்காகும்.

தமிழர்கள் அனைவரையும் மட்டுமல்ல, மாந்தநேயம் கொண்டவர்கள் அனைவரையும் பதைபதைக்க வைத்திருக்கும் மூன்று தமிழர்களின் படுகொலைக்குக் காரணமானவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுத்தரவும், எதிர்காலத்தில் கர்நாடகம் வாழ் தமிழர்கள் யாருக்கும் இத்தகைய நிலை ஏற்படாமல் பாதுகாக்கவும், தேசிய மனித உரிமை ஆணையத்திற்கோ அல்லது உச்ச நீதிமன்றத்திற்கோ இப்பிரச்சனையை உடனடியாகக் கொண்டுசெல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக முதல்வரை வேண்டிக்கொள்கிறேன்.



அன்புள்ள,

[signature]

பழ. நெடுமாறன் - தலைவர்

# இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி ஊடக அமையத்தின் அலுவலகத்தை மீண்டும் வழங்க முடியாதாம்!

ஊடகவியலாளர்களுக்குச் சொந்தமான கட்டிடத்துடன் கூடிய காணி ஒன்றை 17 வருடங்களாக பலவந்தமாக ஆக்கிரமித்து வைத்திருக்கும் இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்ற மறுத்து, போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியின் ஊடகச் சுதந்திரத்திற்கு ஜனாதிபதி அலுவலகம் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெயரிடப்படாத "பாதுகாப்புக் காரணங்களை" குறிப்பிட்டு, இதுவரை ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்களின் போக்கைப் பின்பற்றி, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் நில ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பேணிவருகின்றது.

குறித்த அலுவலகம் அமைந்துள்ள கால் ஏக்கர் காணியை மீள வழங்குமாறு 2009ஆம் ஆண்டு முதல் ஆட்சியாளர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் பலனளிக்காத நிலையில், கிளிநொச்சி ஊடக அமையம் 2026 மே மாதம் தமது கோரிக்கையை மீண்டும் ஜனாதிபதி திஸாநாயக்கவிடம் முன்வைத்துள்ளது.

"அந்தப் பகுதியில் அமைந்துள்ள யோகர் சுவாமிகள் நிலையம் மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு ஆகியன அமைந்துள்ள நிலம், அவற்றின் உண்மையான உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும், கிளிநொச்சி ஊடக அமையத்திற்குச் சொந்தமான காணி இதுவரை விடுவிக்கப்படவில்லை" என ஊடக அமையத்தின் தலைவர் மற்றும் செயலாளரின் கையெழுத்துக்களுடன் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அதற்கு ஒரு மாதத்திற்குப் பின்னர், ஊடக அமையத்தின் கோரிக்கையை நிராகரித்த ஜனாதிபதி அலுவலகம், அதற்கு அடிப்படையாக, ஊடக அமையத்தின் கடிதத்தில் "குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தகவல் அறிக்கை" பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

"அதன்படி, பாதுகாப்புக் காரணங்களால் குறித்த காணியையும் கட்டிடத்தையும் விடுவிக்க முடியாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது" என ஜனாதிபதியின் மூத்த உதவிச் செயலாளர் WMSP வீரசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், அந்தப் பாதுகாப்புக் காரணங்கள் என்னவென்பது இரண்டு பந்திகளைக் கொண்ட அந்த கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.

தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் கிளிநொச்சியில் உள்ள ஊடகவியலாளர்கள், 2008ஆம் ஆண்டு வரை இந்த அலுவலகத்தைத் தமது பணிகளுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளனர். அதுவரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அந்தப் பகுதியில் போர் தீவிரமடைந்ததையடுத்து, தமது இருப்பிடங்களை இழந்த அவர்கள் மீள்குடியேற்றத்திற்காக மீண்டும் 2009ஆம் ஆண்டு அங்கு திரும்பி வந்துள்ளனர்.

மீண்டும் திரும்பிய அவர்கள், A9 வீதிக்கு அருகிலுள்ள "காக்கா கடை" சந்தியில் அமைந்திருந்த தமது அலுவலகமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதைக் கண்டுள்ளனர்.

"எமது சொத்துக்களை விடுவிக்குமாறு கோரி இதுவரை ஆட்சியில் இருந்த அரசாங்கங்களுக்கு நாம் எழுத்துமூலம் கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதிலும், இதுவரை எந்தவொரு சாதகமான முடிவும் கிடைக்கவில்லை. வட மாகாணத்தின் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊடகச் சங்கங்கள் தற்போது தமக்குச் சொந்தமான காணிகளில் அமைந்துள்ள அலுவலகங்களில் தமது பணிகளை முன்னெடுத்து வருகின்றன என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். பணிகளை மேற் கொள்வதற்கு பொருத்தமான இடமின்றி இருக்கும் ஒரே ஊடக அமைப்பு நாங்களே" என கிளிநொச்சி ஊடக அமையம் தமது கடிதத்தின் மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் அதிகளவான இராணுவப் பிரசன்னம் கொண்ட பிரதேசங்களில் ஒன்றில் பணியாற்றும் கிளிநொச்சி ஊடகவியலாளர்கள், தமது தொழிலை சுதந்திரமாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய மாற்றத்தைக் காணும் வாய்ப்பு இதுவரை ஏற்படவில்லை.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "நூல்களின் சங்கமம் - 2026" கண்காட்சியில் தாயக எழுத்தாளர் தீபச்செல்வனின் "சைனைட்" நாவல் வெளியீடு!

கடந்த 16-08-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை. ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெற்ற கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "நூல்களின் சங்கமம் - 2026" கண்காட்சியில் தாயக எழுத்தாளர் தீபச்செல்வனின் "சைனைட்" நாவல் வெளியீடு செய்யப்பெற்றது.

இந்த வெளியீட்டு வைபவத்தின் மூலம் கனடாவில் ரொறன்ரொ பெரும்பாகத்தில் இரண்டாவது தடவை வெளியிடப்பெற்ற ஈழத்து போர் இலக்கிய நூல் என்ற பெருமையை "சயனைட்" நாவல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நூல்களின் சங்கமம் - 2026 கண்காட்சியானது கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவராக விளங்கும் க. ரவீந்திரநாதன் தலைமையில் இயங்கிய இயக்குனர் சபை உறுப்பினர்கள் பலரின் ஒழுங்கமைப்பிட்டட திட்டத்தின் பிரகாரம் வெற்றிகரமாக நடைபெற்றது என்றால் அது மிகையாகாது. அங்கு மேலும் பல எழுத்தாளர்களின் நூல்களும் வெளியிடப்பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாயக எழுத்தாளர் தீபச்செல்வனின் "சைனைட்" நாவல் வெளியீட்டை அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் கனடா வாழ் நிமால் விநாயகமூர்த்தி மற்றும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய துணைச் செயலாளருமான லோகேந்திரலிங்கம் ஆகியோரின் இணைந்த ஏற்பாட்டில் அரங்கேறியது.







நூல் விமர்சனத்தை இலங்கை "வீரகேசரி" பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வி. தேவராஜ் அவர்களும் வெளியீட்டு நிகழ்வை எஸ்.ஜெயானந்தசோதி அவர்களும் வழங்கினார்கள்.

அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி மற்றும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் ஆகியோரும் அங்கு உரையாற்றினார்கள்.



எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் என பல அன்பர்கள் "சைனைட்" பிரதிகளை நிமால் விநாயகமூர்த்தி அவர்களிடமிருந்து பெ ற்றுக் கொண்டனர்.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# கிழக்கு பல்கலைக்கழக விடுதியில் மாணவி தற்கொலை அதனைப் பார்த்த இரு மாணவிகள் மயங்கி வீழ்ந்தனர் – மாவட்டத்தில் 7 மாதத்தில் 84 தற்கொலை

கிழக்கு பல்கலைக்கழக கல்லடி சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி விடுதியில் மாணவி ஒருவர் 19ம் திகதி அன்று புதன்கிழமை பிற்பகல் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டதுடன் அதனைப் பார்த்த அதிர்ச்சியில் இரு மாணவிகள் மயங்கி வீழ்ந்த நிலையில் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இவ்வாறிருக்க. மட்டக்களப்ப மாவட்டத்தில் 7 மாதத்தில் 84 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் ஆர்.டி.ஏ. வீதியைச் சேர்ந்த 20 வயதுடைய மாணவியான கே. யாழினி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதுபற்றி தெரியவருவதாவது: குறித்த கல்லூரிக்கு நாடகத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதையடுத்து குறித்த மாணவி கல்லூரி விடுதியில் தங்கியிருந்து முதலாம் ஆண்டில் கல்வி கற்று வருகிறார்.

இந்நிலையில் விடுதியிலுள்ள அறையில் சம்பவ தினமான இன்று பிற்பகல் சுமார் 12.00 மணியளவில் குறித்த மாணவி தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டார் இதனைப் பார்த்த அதிர்ச்சியில் இரு மாணவிகள் மயங்கி வீழ்ந்தையடுத்து அங்குள்ள மாணவர்கள் உடனடியாக தற்கொலை செய்து கொண்ட மாணவியையும் மயங்கி வீழ்ந்த மாணவிகளையும் மீட்டு மட்டு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்தனர்.

இந்த நிலையில் தற்கொலை செய்து கொண்ட மாணவி ஏற்கனவே உயிரிழந்துள்ளதாகவும் மயங்கி வீழ்ந்த மாணவிகள் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிசாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் உயிரிழந்த மாணவியின் சடலம் பிரே பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசர் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஜூலை 31 வரையிலான கடந்த 7 மாதத்தில் 84 பேரும் கடந்த ஜுன் மாதத்தில் 8 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன் கடந்த வருடம் 2025 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ம் திகதி வரையான ஒரு வருடத்தில் 164 தற்கொலை செய்து கொண்டுள்ளதாக மாவட்ட பொலிஸ் தலைமைக் காரியாலய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# "மட்டக்களப்பு எம்.பி – ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா சூறையாடிய காணிகள் அரசாங்கம் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்"

## ஈரோஸ் கட்சி இராஜநாதன் பிரபாகரன் வற்புறுத்துகின்றார்!

மட்டக்களப்பு வாகரை வாழைச்சேனை, புனானை பகுதிகள் உட்பட பல பிரதேசங்களில் ஆயிரம் ஏக்கர் அரச காணிகளை சட்டவிரோதமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா சூறையாடி சொத்து குவித்துள்ளார் எனவே சூறையாடிய காணிகள் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு சரணடைய வேண்டும் என ஈரோஸ் கட்சி தலைவர் இராஜநாதன் பிரபாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வொய்ஸ் ஒப் மீடியாவில் 18ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடு பூராகவும் சுகாதார ஊழியர்கள் ஒரே சீருடையில் கடமையாற்றி வருகின்றனர். கல்முனை வைத்தியசாலை சீருடை பிரச்சனை நிர்வாக மட்டத்தில் சுமூகமாக முடிக்க வேண்டிய பிரச்சனை ஆனால் இதனை ஒரு இனவாத போக்குள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் பூதாகரமாகி கிழக்கை முஸ்லிம்களின் ஆதிக்கத்தை கொண்டு வந்து அரபு இராச்சியமாக மாற்ற வேண்டும் என்ற அடிப்படையில் செயறப்பட்டு வருகின்றார்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்தவிடாது இன்று வரை தடுத்து இனவாத விஷத்தை காட்டி வருகின்ற இவர் கிழக்கை அரபு இராஜ்சியமாக கொண்டுவருவதற்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த சீருடை அதன் பிரதிபலன் தான் கல்முனையில் இஸ்லாமாபாத் நகரம் உருவாக்கப்பட்டுள்ளது அதனால் தான் தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த விடாதற்கு காரணம்.

இவ்வாறு தமது அரசியல் இருப்புக்கள் தக்கவைப்பதற்கு இன துவேசத்தை கக்கி வருகின்றார். இந்த பிரச்சனை சுகாதார மட்டத்தில் தீர்த்து கொள்வார்கள் விளங்கி கொள்ள வேண்டும். தமிழ் முஸ்லிம் உறவை பிரிக்க வேண்டாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஊடகங்களில் ரவுசரை கழற்றினால் எல்லாம் தெரியும் என கூறுகிறார் வைத்தியர் சுகுணன் ரவுசரை கழற்ற சொல்ல வில்லை இலங்கை பூராகவும் ரவுசர் இல்லாமல் தான் வேலை செய்கின்றனர் ஏதாவது தெரிகிறதா ? ஹக்கீமுக்கு மட்டும் ரவுசர் கழட்டினால் தெரிகிறது இது தமிழ் பெண்கள் மீது முஸ்லிம் பெண்கள் கோபத்தை கொண்டு வரும் எனவே பன்பாக கதைக்க வேண்டும்.

நான் தமிழ் முஸ்லீம் சிங்களம் என பார்த்தது இல்லை யார் பிழை செய்தாலும் பிழை பிழைதான் எனவே கிழக்கு மாகாணம் ஒரு அரபு இராஜ்சியமாக மாற இடம் கொடுக்க முடியாது.

அதேவேளை வாகரை காரை முனையில் தமிழர்களின் பூர்வீக இடங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, மற்றும் ரவூப் ஹக்கீம் கடந்த 3 தினங்களுக்கு சென்று அது முஸ்லிம்களின் பாரம்பரிய இடம் என அதற்கு போலி ஆவணங்களை தயாரித்து அரச காடுகளை அழித்து ஆக்கிரமித்து கொண்டிருக்கின்றனர் இதற்கு வனபரிபாலன திணைக்களம் உடந்தையாக இருக்கின்றனர். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முஸ்லிம் மக்களுக்கு காணி தேவை என்றால் அரசாங்கத்துடன் பேசி அரச அதிபர் பிரதேச செயலாளர்களுடன் பேசி மக்களுக்கு கொடுப்பது வேற விடையம் ஆனால் அதை விட்டு போலி ஆவணங்களை தயாரித்து கொண்டு காடு முற்றாக அழிக்கப்பட்டுள்ளது தொடர்பாக அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.

இவ்வாறே ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லாவும் அவரது மகனும் ஹய்ரா பவுண்டேஷன் என்ற அவர்களது பவுண்டேஷன் ஊடாக கதிரவெளியில இராமர்தீவு, வாகரையில் நடுத்தீவு, காயங்கேணி புல்லாவிபகுதில் 100 ஏக்கர், மாங்கேணி உட்பட வாகரை பிரதேசத்தில் பல ஏக்கர், எருமைத்தீவு 200 ஏக்கர், புனானையில் 400 ஏக்கர் என அரச காணிகளை சூறையாடியுள்ளனர்.

அதுமட்டுமல்ல வாழைச்சேனையில் நெல் சந்தைப்படுத்தும் கட்டிடத்தை அடியோடு அழித்து ஹய்ரா பவுண்டேஷனுக்கு பலவந்தமாக பெற்றுக் கொண்டு பிஸ்மில்லா காமன்ஸ், செரண்டிக் கம்பனியாகிய இரு கம்பெனிகளுக்கு விற்றுள்ளனர்.

இவ்வாறு இந்த சட்டவிரோதமாக சொத்து குவிப்பு எல்லாம் ராஜபக்ஷ கூட்டு அரசாங்க கால கட்டத்தில் சூறையாடப்பட்டது மட்டுமல்ல அதிகாரத்தை வைத்து கொண்டு காத்தான்குடியில் பேரீச்சம் பழ மரத்தை வைக்க கூடாது என்ற நீதவானை மாற்றிவிட்டு வேறு நீதவானை கொண்டுவந்து அந்த மரங்கள் பிடுங்க முடியாது என உத்தரவு போடுமாறு நீதவானுக்கு அழுத்தம் கொடுத்து உத்தரவு பெற்றுக் கொண்டார்.

எனவே சட்டவிரோதமாக ஹிஸ்புல்லா சூறையாடிய காணிகள் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு சரணடைய வேண்டும் அல்லது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் நிதி குற்ற புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடு செய்வேன் என மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தின மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பில் பொதுக் கலந்துரையாடல்!

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தின மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையில் மட்டக்களப்பில் பொதுக் கலந்துரையாடல் ஒன்று அண்மையில்˙ நடைபெற்றது.

எதிர்வரும் ஆகஸ்ட் 30ஆம் திகதி சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு, வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் சர்வதேச மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும், மாநாட்டிற்கான பொதுமக்கள், அரசியல் பிரதிநிதிகள், மதகுருமார்கள் மற்றும் சிவில் சமூகத்தினரின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 17ம் திகதி திங்கட்கிழமை அன்று காலை பொதுக்கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவி திருமதி அ. அமலநாயகி தலைமைய-ில் மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான, ஞா. சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அரியநேத்திரன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் ச. சிவயோகநாதன், மதகுருமார்கள், அமெரிக்கன் மிஷன் அருட்தந்தை டேவிட், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின்போது எதிர்வரும் சர்வதேச மாநாடு தொடர்பான முக்கிய விடயங்கள் பகிரப்பட்டதுடன், மாநாட்டை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளும் பெறப்பட்டன. மாநாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் ஆதரவும் கோரப்பட்டது.

சர்வதேச நீதியே எமது கோரிக்கை

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்துள்ள நிலையில், சர்வதேச நீதிப் பொறிமுறையின் அவசியத்தை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுசெல்வதே இம்மாநாட்டின் பிரதான நோக்கமாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

விசாரணைக்காகவும், பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்படுவதாகவும் கூறி அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இலங்கை அரசு இதுவரை உரிய பொறுப்புக்கூறலை முன்னெடுக்கத் தவறியுள்ளது. இதனாலேயே தாம் சர்வதேச நீதியை வலியுறுத்தி வருவதாக மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் தலைவி திருமதி அ. அமலநாயகி தெரிவித்தார்.



மேலும், தமது உறவுகளைத் தேடி நீண்டகாலமாகப் போராடி வந்தவர்களில் 600க்கும் மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர்களின் போராட்டங்களும், சாட்சியங்களும் எதிர்கால சந்ததியினருக்கும் சர்வதேச சமூகத்திற்கும் சென்றடையும் வகையில், உயிரிழந்த உறவுகளின் சாட்சியங்களைப் பதிவு செய்து நூல் வடிவில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், "அழிக்கப்பட்ட சாட்சியங்கள்" என்ற தலைப்பிலான நூல் ஒன்றையும், இதுவரை தமது போராட்டங்களின் ஊடாக முன்வைக்கப்பட்ட அறிக்கைகளைத் தொகுத்து மற்றுமொரு நூலாகவும் வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் சர்வதேச மாநாட்டில் பல்வேறு முக்கிய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இதில் சிறப்புரைகள், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை உள்ளடக்கிய கண்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுடன் பேரணிகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பல ஆண்டுகளாக எதிர்கொண்டுவரும் வலிகளையும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்கும் முக்கிய தளமாக இம்மாநாடு அமைய வேண்டும் எனவும் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

இம்மாநாட்டில் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த பொதுமக்கள், அரசியல் பிரதிநிதிகள், மதகுருமார்கள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பங்கேற்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் நீதிக்கான போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமாறு ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளனர்.

"நடைபெற்ற அநீதிக்கு சர்வதேச நீதி வேண்டும்" என்ற கோரிக்கையை வலுப்படுத்தும் வகையில், எதிர்வரும் ஆகஸ்ட் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு ஆதரவு வழங்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

***மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம்***

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ
SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3

ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
14.08.2028 வெள்ளி முதல் 23.08.2026 ஞாயிறு வரை



மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி 10 தினமும் மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.

கைலாச வாகனக்காட்சி
14.08.2026 வெள்ளி
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப

சப்பற அலங்காரக் காட்சி
21.08.2026 வெள்ளி
மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப

தேர் அலங்காரக் காட்சி
22.08.2026 சனிக்கிழமை
காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப

21.08.2026 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
சுமங்கலி பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



காலை 7:30 மணிமுதல் வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், சப்பறத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜைகளும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரத நூல் கட்டுதல் என்பன நடைபெறும்.

திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

416.291.8500 vinaayagar.com vinaayagar



# காணாமல் ஆக்கப்பட்டவருக்கு நீதி? செம்மணிக்கு நீதி?

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

இந்த மாதம் 30ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளின் மாநாடு ஒன்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற உள்ளது. அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் அன்றாகும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காகப் போராடும் அமைப்புக்கள் இந்த மாநாட்டை ஒழுங்குபடுத்தி வருகின்றன.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டம் என்பது இன்று நேற்று தொடங்கியது அல்ல. அம்மாக்களின் போராட்டம் கடந்த 17 ஆண்டுகளாகத்தான் இடம்பெற்று வருகிறது என்பதல்ல. அது 1984ஆம் ஆண்டிலேயே தொடங்கியது. 1984 ஆம் ஆண்டில் இலங்கைத்தீவின் முதலாவது அன்னையர் முன்னணி யாழ்ப்பாணத்தில் தோன்றியது. கைது செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்காகப் போராடும் அம்மாக்கள் அந்த முன்னணியை உருவாக்கினார்கள். அங்கிருந்து தொடங்கி கிட்டதட்ட 42 ஆண்டுகளாக அம்மாக்கள் தங்கள் உறவுகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அம்மாக்களின் போராட்டத்துக்கு முடிவே இல்லை. முதலாம் கட்ட ஈழப் போரில் தொடங்கி ஈழப் போர் முடிவுக்கு வந்த பின்னரும் அம்மாக்களின் போராட்டத்துக்கு முடிவு இல்லை. அம்மாக்களுக்கு நீதி கிடைக்கவே இல்லை. இக்கட்டுரை எல்லாவிதமான அரசியல் நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கும் எல்லாவிதமான அம்மாக்களையும்தான் குறிக்கிறது.

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் அம்மாக்களின் போராட்டத்துக்கு முடிவே இல்லை. அம்மாக்களின் கண்ணீருக்கும் முடிவே இல்லை. தீராத கண்ணீர்: தீராத துக்கம்: முடியாத போராட்டம். இவ்வாறு கடந்த 42 ஆண்டுகளாக அம்மாக்களுக்கு நீதி கிடைக்காத ஒரு சமூகத்தில், குறிப்பாக கடந்த 17ஆண்டுகளாக எல்லாப் போராட்டக் களங்களிலும் அம்மாக்களின் கண்ணீர் சிந்தப்படும் ஓர் அரசியல் களத்தில், செம்மணிக்கு நீதி கிடைக்குமா?

கடந்த 17 ஆண்டுகளாக தமிழ்த் தேசியப் பரப்பில் உணர்ச்சிகரமான விடயங்களில் ஒன்று அம்மாக்களின் கண்ணீர்: அம்மாக்களின் கதறல். பெரும்பாலான எல்லாப் போராட்டங்களிலும் முன்னணிப் போராளிகள் அவர்கள்தான். பெரும்பாலான எல்லாப் போராட்டங்களிலும் அவர்களுடைய கண்ணீர்தான் போராட்டத்தை உணர்ச்சிகரமானதாகவும் எழுச்சிகரமானதாகவும் மாற்றும். இவ்வாறு கடந்த 17ஆண்டுகளாக போராட்டங்களின் கூர்முனைபோல காணப்படும் இந்த அம்மாக்களை, உலக சமூகத்தில் இருந்து வருகிற பெரும்பாலான பிரதிநிதிகள் சந்தித்து வருகிறார்கள். ஐநாவின் முக்கியஸ்தர்கள் தொடக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் தூதரகங்களின் பிரதிநிதிகள் என்று சொல்லி பெரும்பாலான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இந்த அம்மாக்களைக் கண்டு வருகிறார்கள். கண்ணீருடன் காணப்படும் அம்மாக்களின் படங்கள் உலகில் எல்லா ஊடகங்களிலும் முகப்பு செய்திகளாக வந்திருக்கின்றன. அம்மாக்களின் கண்ணீரும் கதையும் இப்பொழுதும் ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக வருகிறது. ஆனால் அம்மாக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

இந்த அம்மா, அப்பாக்களில் வயதாகி முதுமை கண்டு ஒரு தொகுதியினர் இறந்து போய்விட்டார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதி கிடைக்காது என்று ஏக்கத்தோடு அவர்கள் இறந்துபோய் விட்டார்கள். எனினும் மிஞ்சியிருப்பவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அம்மாக்களில் பெரும்பாலானவர்கள் நடுத்தர வர்க்கம் அல்லது கீழ் நடுத்தர வர்க்கம் அல்லது அதைவிட ஏழ்மை நிலையில் இருப்பவர்கள். இவர்களுக்காக உழைக்கவேண்டிய பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டு விட்டார்கள். இவர்களுக்கென்று குடும்பங்கள் உண்டு. பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் உண்டு. இவர்கள் தங்களுடைய வீடுகளில் இருந்து, பேரப்பிள்ளைகளைக் கவனித்திருக்கலாம். தமது பிள்ளைகளுக்குத் துணையாக இருந்திருக்கலாம். ஆனால் அவை எவற்றையும் செய்ய விரும்பவில்லை, நீதிக்காக வீதிகளில் நிற்கிறார்கள்.

இவர்கள் ஒவ்வொரு முறையும் போராட்டக் களத்திற்கு வரும்போதும் மனிதாபிமான அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்திக்கும்போதும் விசாரணை குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்திக்க வரும்போதும் அதற்கென்று பயணச் செலவு வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுடைய ஆவணங்களை போட்டோப் பிரதி எடுப்பதற்கும் காசு வேண்டும். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு முதிய தாய் சொன்னார் “போட்டோக் கொப்பி அடிச்சு அடிச்சு வேளாமை செய்த காசெல்லாம் முடிஞ்சு போச்சு” என்று. வன்னியிலிருந்து விசாரணைக் கொமிஷனுக்கு வந்த ஒரு தாய் சொன்னார் அன்றைய நாள் சாப்பாட்டுச் செலவை பேருந்துக்குக் கொடுத்துவிட்டு சாப்பிடாமல் வந்ததாக.

அந்த முதிய, நொந்த, நோயாளிகளான, இழப்பினாலும் துக்கத்தினாலும் வதங்கிப்போன அம்மாக்களுக்குப் பயணச் செலவுக்கும் சாப்பாட்டுச் செலவிற்கும் காசு தேவை. அவர்கள் காற்றை குடித்துக்கொண்டு வெயிலைக் குடித்துக் கொண்டு போராட முடியாது. அதுவும் முதிய வயதில். அவர்களுடைய குடும்பங்களை யார் கவனிக்கிறார்கள்? இந்த அம்மாக்களின் செலவுகளை யார் கொடுக்கிறார்கள்? கடந்த 17ஆண்டுகளாக எல்லாப் போராட்டக் களங்களிலும் “ரெடிமேட்” போராளிகளாகப் பயன்படுத்தப்படுகின்ற இந்த அம்மாக்களின் நிதி நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கான மையமான அமைப்பு ஏதாவது தமிழ்மக்கள் மத்தியில் உண்டா? இல்லை.

புலம்பெயர்ந்த சில கட்டமைப்புகள்தான் அவர்களுக்கு உதவி செய்கின்றன. அந்த அமைப்புகள் இவர்களை அணிகளாகப் பிரித்து மோத விடுகின்றன என்ற குற்றச்சாட்டு உண்டு. ஆனாலும் அந்த அமைப்புகளும் தனி நபர்களும் உதவவில்லை என்றால் இந்த அம்மாக்கள் அரங்கில் சோர்வின்றி நின்று பிடித்திருப்பார்களா?

இவ்வாறு அம்மாக்களின் கண்ணீருக்கு 17ஆண்டுகளாக நீதி கிடைக்காத ஒரு சமூகத்தில், கடந்த செவ்வாய்க்கிழமை, பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான புதிய சட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருக்கும் ஓர் உள்நாட்டு நீதி பரிபாலனச்சூழலில், செம்மணிப் புதைகுழிக்கு நீதி கிடைக்குமா? அதற்கென்று சர்வதேச விசாரணைக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் எப்படி நம்புவது?

17 ஆண்டுகளாக அம்மாக்களின் கண்ணீருக்கு விடையில்லை. ஆனால் இந்த 17ஆண்டுகளுக்குள்ளும் புதிதுபுதிதாக போராட்டக் களங்கள் திறக்கப்படுகின்றன. செம்மணிக்கு நீதி கேட்டுப் போராட்டங்கள்: பலாலி மயிலிட்டியில் 36ஆண்டுகளுக்கு முன்பு ஆக்கிரமிக்கப்பட்ட தமது நிலத்தைக் கேட்டுப் போராட்டங்கள்: கிழக்கில் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைகளில் ஆயிரம் நாட்களுக்கு மேலாகப் போராட்டங்கள்: தையட்டியில் ஒவ்வொரு முழு நிலா நாளிலும் போராட்டங்கள் என்றிவ்வாறாக தமிழ்ச் சமூகத்தில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இதுதொடர்பாக தொகுக்கப்பட்ட ஓர் அரசியல் பார்வை: ஓர் அரசியல் வியூகம் தமிழ்த் தேசியப் பரப்பில் இல்லை. இந்த எல்லா போராட்டங்களுமே தெட்டம் தெட்டமானவை: ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படாதவை: ஒருங்கிணைக்கப்படாதவை.

தமிழ்மக்கள் கடந்த 17 ஆண்டுகளாக தமது அரசியலை நீதிக்கான போராட்டம் என்று கூறிக்கொள்கிறார்கள். ஆனால், நீதிக்கான போராட்டத்தில், அந்தப் போராட்டத்தை எப்படி நடாத்த வேண்டும்? எங்கெங்கு நடாத்த வேண்டும்? யார் யாரை ஒருங்கிணைக்க வேண்டும்? போன்ற விடயங்களை ஒரு மையத்திலிருந்து திட்டமிட்டு, ஒரு மையத்திலிருந்து அந்தப் போராட்டங்களை ஒருங்கிணைத்து வழிநடத்த யாருமே தயாராக இல்லை. நிதிக்காகப் போராடும் ஒரு மக்கள் அதற்கென்று போராட்ட அமைப்புகளையும் கட்டமைப்புக்களையும் கொண்டிருக்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உருவாக்கிய கட்டமைப்புகள்தான் ஏற்கனவே நிறுவனமாக உள்ள பல்கலைக்கழக மாணவர்களையும் கையாண்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் போராட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கத் தேவையான அரசியல் இயக்கங்கள் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை.

இப்பொழுது வடக்கு-கிழக்கில் பெரும்பாலான முருக கோவில்களில் திருவிழாக்கள் நடக்கின்றன. யாழ்ப்பாணம், செல்வச்சந்நிதியில் பெருந்திருவிழா நடந்து கொண்டிருக்கிறது. நல்லூர் பெருந்திருவிழா தொடங்கி விட்டது. கோவில் பெரு விழாக்களை நோக்கி லட்சக்கணக்கில் மக்கள் குவிகிறார்கள். நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்ற, யாழ்ப்பாணத்தை நோக்கி வருகின்ற பெரும்பாலான எல்லாப் புகையிரதங்களிலும் முன்பதிவு ஆசனங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு விட்டன. இது புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயகத்தை நோக்கி வருகிற காலம். மேலும் பாடசாலைகளுக்கு விடுமுறைக் காலம். எனவே புகையிரதங்களில் முன்பதிவு ஆசனங்கள் முடிந்துவிட்டன. அந்தளவுக்கு மக்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி வருகிறார்கள்: போகிறார்கள்.

இவ்வாறு லட்சக்கணக்காக தமிழ் மக்கள் கோவில் பெரு விழாக்களில் திரளும் ஒரு சமூகத்தில், ஆயிரக்கணக்காக மக்கள் உணவுப் பெருவிழாக்களை நோக்கியும் வாகனப் பெருவிழாக்களை நோக்கியும் திரளும் ஒரு சமூகத்தில், நீதிக்கான போராட்டத்தில் லட்சக்கணக்கானவர்கள் திரளுவதில்லை. அதற்குப் பொறுப்பு தமிழ் அரசியலை முன்னெடுக்கின்ற சக்திகள்தான். மக்கள் அல்ல. மக்கள் எப்பொழுதும் அப்படித்தான் இருப்பார்கள். மக்களை அரசியல் உணர்வு மிக்கவர்களாக தங்களுடைய நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்மானிக்கக்கூடிய அரசியல்மீது உணர்திறன் மிக்கவர்களாக, மாற்ற வேண்டியது தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுக்கின்ற சக்திகளுடைய பொறுப்பு. ஆனால் அவர்கள் கடந்த 17 ஆண்டுகளாக அதைப் பொருத்தமான விதங்களில் செய்திருக்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மாக்களுடைய கண்ணீரும் கதறலும் எல்லாப் போராட்டக் களங்களுக்கும் தேவை. ஆனால் அந்த அம்மாக்களின் செலவுகளைப் பராமரிப்பதற்கு ஒரு மையமான அமைப்பு எந்த ஒரு கட்சியிடமும் இல்லை. அல்லது கட்சிகடந்த அமைப்பும் இல்லை.

ஒரு போராட்டத்திற்கு அல்லது பேரணிக்கு ஆட்களை ஏற்றிக்கொண்டு வருவதென்றால் அதற்குப் பேருந்துகள் தேவை. அவற்றுக்கு ஒரு செலவு உண்டு. அழைத்து வரப்படும் மக்களுக்கு குடிபானம், சாப்பாடு போன்றவற்றை ஏற்பாடு செய்வதற்குக் காசு தேவை. ஆகமொத்தம் வெளி மாவட்டங்களில் இருந்து போராட்டக் களங்களுக்கு ஆட்களை அழைத்துக் கொண்டு வருவதற்கு பெரிய நிதி தேவை. அப்படி ஒரு போராட்ட நிதி எந்தக் கட்சியிடமும் இல்லை. அவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு நிதி உதவி செய்வதற்கு எந்த ஒரு கட்டமைப்பும் இல்லை. ஆனால் தமிழ் மக்கள் கூறிக் கொள்கிறார்கள் இது நீதிக்கான போராட்டம் என்று.

எதற்காகப் போராடுகிறோம் என்று கூறுகிறார்களோ, அதற்காக ஒரு கட்டமைப்பும் இல்லை. அதற்கென்று பொதுவான நிதியும் இல்லை. அதற்கென்று வழி வரைபடமும் இல்லை. இவ்வாறு ஒரு மையத்தில் இருந்து முடிவெடுக்கப்பட வேண்டிய விடையங்களை முடிவெடுக்காமல் சிதறலாக, தெட்டம்தெட்டமாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு நீதிக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு, ஆனால் அதற்கு வேண்டிய கட்டமைப்புகள் எவையும் இல்லாமல், சிதறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில், கடந்த சில மாதங்களாக மாகாணசபைத் தேர்தலை நோக்கி வாதப்பிரதிவாதங்கள், கருத்துக் கணிப்புகள், தீர்க்கதரிசனங்கள் அதிகரித்து வருகின்றன.

மாகாண சபைத் தேர்தல்கள் நடக்குமோ நடக்காதோ தெரியாது. அவை எப்பொழுது நடத்தப்படும் என்பதும் தெரியாது. ஆனால் யாரை முதலமைச்சர் வேட்பாளராக முன் நிறுத்தலாம்? யார் வெல்லக்கூடும்? போன்ற வாதப் பிரதிவாதங்கள் அதிகரித்த அளவில் நடந்துவருகின்றன.

தன்னுடைய பிரதான அரசியல் கோரிக்கையை முன்வைத்து ஒரு பெருந் திரளாக போராடுவதற்கு வேண்டிய பலத்தைத் திரட்டிக் கொள்ளாத ஒரு சமூகம், மாகாண சபைகளை கையில் கொடுத்தால் என்ன செய்யும்? எதை வெட்டிப் பிடுங்கும்? தானே தனக்குள் மோதி, தானே தன்னைப் பழித்து, தானே தன்னைத் தோற்கடித்து, ”நந்தவனத்து ஆண்டியைப்போல கூத்தாடிக் கூத்தாடி தோண்டியைப் போட்டு உடைத்துவிடுமா”?


Elanila Creations Presents
ATCHATHRAA MUSIC GROUP
KOVAI KAMALA
Live in Toronto - 2026
28TH AUGUST 2026
SCAN HERE
GET YOUR TICKETS HERE: HTTPS://WWW.TICKETMI.CA
CHINESE CULTURAL CENTRE OF GREATER TORONTO
More info : elanilacreations@gmail.com

# வடக்கு, கிழக்கில் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகளை விரைவில் விடுவிக்குக!

## - பாதுகாப்புப் பிரிவினருக்கு ஜனாதிபதி உத்தரவு



இலங்கையில் கடந்த யுத்த காலத்தின் போது பாதுகாப்புப் பிரிவினரால் கையகப்படுத்தபட்டஇ தற்போது விடுவிக்கப்படக் கூடியவை என அடையாளம் காணப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணக் காணிகளை உடனடியாக விடுவித்து, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கையளிக்குமாறு பாதுகாப்புப் பிரிவினருக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவுறுத்தல் வழங்கினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்த காலத்தில் இராணுவ முகாம்களை அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்ட தனியார் காணிகள் மற்றும் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட அரச காணிகள் ஆகியவற்றை மீண்டும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு விடுவிப்பதை துரிதப்படுத்துவது தொடர்பாக இன்று வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்பதுடன்இ தேசிய பாதுகாப்புக்காக இராணுவ முகாம்கள் எங்கு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது முப்படையினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புடன் தொடர்புடையவர்களின் பொறுப்பாகும் எனவும் இங்கு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதன் அடிப்படையில் எவ்வாறான காணிகளை விடுவிக்கலாம், எவ்வாறான காணிகளை விடுவிக்க முடியாது என்பது தொடர்பான இறுதித் தீர்மானத்துக்கு வருமாறும் அறிவுறுத்தினார்.

அவசியமான காணி அளவைத் தீர்மானிக்கும் போது இயன்றவரை மக்களின் தரப்பிலிருந்து சிந்தித்து, விடுவிக்கக் கூடிய அதிகபட்ச காணிகளை விடுவிக்குமாறு மேலும் அறிவுறுத்திய ஜனாதிபதி, அவ்வாறு வழங்கப்படும் காணிகளுக்கு மேலதிகமாக அந்த மக்களின் வாழ்வாதார வழிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

அதற்காக உயர் உற்பத்தித் திறனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நவீன விவசாயத் தொழில்நுட்பத்துடன் கூடிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு இதன்போது பணிப்புரை விடுத்தார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் டி. பி. விக்கிரமசிங்க, காணி ஆணையாளர் நாயகம், முப்படைத் தளபதிகள், பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

Carefirst Family Health Team
Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.



உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24








YORK CINEMAS
woodside cinemas
Tamil Fest
தமிழர் தெரு விழா
DOVE SQUARE PROPERTY MANAGEMENT INC.
AUGUST 22 & 23
BIRCHMOUNT ROAD BETWEEN 14TH AVENUE AND ENTERPRISE BLVD CITY OF MARKHAM
தமிழர் தெரு விழா 2026
TITLE SPONSOR
YORK CINEMAS
woodside cinemas
POWERED BY
DOVE SQUARE PROPERTY MANAGEMENT INC
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
MEDIA SPONSORS
cmr
ATN
SILVER SPONSORS
Chapel Ridge
DYNEVOR EXPRESS EXPEDITED SERVICES 1-866-DYNEVOR
huis design studio CUSTOM HOME DESIGN
KUBER MORTGAGE INVESTMENT CORPORATION
MITSUBISHI MOTORS
MORNINGSIDE MITSUBISHI
NP MORTGAGES
RAFAT
REMAX COMMUNITY
VIBRANT HOSPITALITY GROUP
VINYL WINDOWS FASHION INC.
WOW! WING HOUSE
SUPPORTED BY
Canada
Destination Markham
SPONSORS
SV MEDIA LTD
Little Electric Inc.


ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty
ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.
டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.
அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்
*Authorized by the Scarborough Southwest Riding Association
LIBERAL
AHSANUL
HAFIZ
THE CANDIDATE
FOR YOU IN
SCARBOROUGH
SOUTHWEST


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416.893.3216



# அரசியலமைப்பு திருத்தங்களும் ஆட்சியாளரின் அதிகார சதுரங்கமும்

***"இலங்கையின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால், 1ஆவது திருத்தம் முதல் 21ஆவது திருத்தம் வரை ஒவ்வொரு ஆட்சியாளரும் தங்களின் அதிகார பலத்திற்காகவும், அரசியல் ஆயுளுக்காகவுமே அரசியலமைப்பைத் திருத்தி எழுதியிருக்கிறார்கள். இதனால் அரசியலமைப்பு என்பது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கேடயமா அல்லது ஆட்சியாளரின் அதிகாரத்தைப் பெருக்கும் ஆயுதமா என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாதது."***

**------------------------------------------------------------------ கே.பாலா -**

1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையின் இரண்டாவது அரசியலமைப்பு என்பது, நாட்டின் ஜனநாயகப் பண்புகளை செழுமைப்படுத்துவதற்காக வரைந்த ஒரு உயரிய ஆவணம் என்பதை விடவும், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த தலைவர்கள் தங்களின் அரசியல் ஆயுளை நீடித்துக் கொள்ளவும் அதிகாரத்தை தக்கவைக்கவும் வரைந்து கொண்ட ஓர் அரசியல் சதுரங்கப் பலகையாகவே வரலாறு முழுக்க பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. கடந்த 48 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட 21 திருத்தங்களும், மக்களின் தேவைகளை விடவும் அக்காலப்பகுதி ஆட்சியாளர்களின் அரசியல் நலன்களையே முதன்மையாகக் கொண்டிருந்தன என்பது கசப்பான உண்மை.

வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால், 1ஆவது திருத்தம் முதல் 21ஆவது திருத்தம் வரை ஒவ்வொரு ஆட்சியாளரும் தங்களின் அதிகார பலத்திற்காகவும், அரசியல் ஆயுளுக்காகவுமே அரசியலமைப்பைத் திருத்தி எழுதியிருக்கிறார்கள். அரசியலமைப்பு என்பது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கேடயமா அல்லது ஆட்சியாளர்களின் அதிகாரத்தைப் பெருக்கும் ஆயுதமா என்ற சந்தேகம் இலங்கையின் அரசியல் வரலாற்றை உற்றுநோக்கும் எவருக்கும் எழுவது தவிர்க்க முடியாதது. கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட 21 திருத்தங்களும் அதிகாரப் போட்டிகளின் விளை நிலங்களாகவே இருந்து வந்துள்ளன.

இந்த வரலாற்றுத் தொடர்ச்சியின் அடுத்த கட்டமாக, தற்போதைய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசும் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் கையில் எடுத்திருக்கிறது. "மாற்றம்" என்ற முழக்கத்தோடு ஆட்சிக்கு வந்த ஒரு அரசாங்கம், சட்டத்தரணிகள் சங்கம், எதிர்க்கட்சிகள், பொது அமைப்புக்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் மகா சங்கத்தினரின் கடுமையான எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் புறம்தள்ளி இத்திருத்தத்தை முன்னெடுப்பது, இதுவும் பழைய அரசியல் சுயநலத்தின் மறுவடிவமா அல்லது உண்மையான மறுசீரமைப்பா என்ற பெரும் விவாதத்தையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்கான விதிகளை உள்ளடக்கிய 22ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைவு சட்டமூலம், கடந்த 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரும் சட்டத்தரணியுமான ஹர்ஷன நாணயக்காரவினால் எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பது தொடர்பான அரசாங்கத்தின் முன்மொழிவு, தொடக்கத்திலிருந்தே மகாநாயக்க தேரர்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் மற்றும் பல சர்வதேச அமைப்புகள் உட்பட பலரிடமிருந்து எதிர்ப்பைச் சந்தித்து வந்த நிலையிலேயே எதனையும் பொருட்படுத்தாது அநுரகுமார அரசாங்கத்தினால் 22ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைவு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின்படி, ஒரு சட்டமூலம் பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவுடன், அதனை உயர் நீதிமன்றத்தில் எதிர்த்து வழக்குத் தொடர 14 நாட்கள் அவகாசம் வழங்கப்படும். உயர் நீதிமன்றம் அத்தகைய மனுக்களை விசாரித்து, மூன்று முதல் 21 நாட்களுக்குள் தனது தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு தெரிவிக்க வேண்டும். அந்தவகையில் 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிராக பல மனுக்கள் தாக்கல் செய்யப்படத் தொடங்கியுள்ளன. இவை தொடர்பான நீதிமன்றத்தின் தீர்மானங்களை சபாநாயகர் சபையில் அறிவிப்பார். சபாநாயகரின் அறிவிப்பைத் தொடர்ந்து 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும். அதற்கான திகதிகள் பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இவ்வாறான நிலையில் இதுவரை அரசியலமைப்பில் செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் ஒரு மீள்பார்வையை செலுத்துவோம்.

1977 ஜூலை பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. சபையில் ஆறில் ஐந்து பெரும்பான்மைகளைக் கொண்டதாக அது விளங்கியது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் தனியொரு அரசியல் கட்சியினால் சாதிக்கக்கூடிய மிகப்பெரிய வெற்றியாகவும் அது அமைந்தது. இந்த வெற்றியைப் பயன்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ஜே.ஆர். ஜெயவர்த்தன 1972 அரசியலமைப்பை இல்லாதொழித்தார். அதன் பிரகாரம் 1978 செப்டெம்பர் 7 ஆம் திகதி புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அது ஒரு சபையைக் கொண்ட பாராளுமன்றத்தையும் சகல அதிகாரங்களுமுடைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் அறிமுகப்படுத்தியது. புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட பின்னர் நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஜெயவர்த்தன பதவியேற்றார். ரணசிங்க பிரேமதாச பிரதமராக நியமிக்கப்பட்டார்.

1ஆவது திருத்தம் 20 நவம்பர் 1978 இல் கொண்டுவரப்பட்டது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படுகின்ற குறிப்பிட்ட சில வழக்குகள் உச்ச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட முடியும் என்பதே இந்த திருத்தம்.

2ஆவது திருத்தம் 26 பெப்ரவரி 1979 இல் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவதற்கும் வெளியேற்றப்படுவதற்குமான நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.

3ஆவது திருத்தம் 27 ஆகஸ்ட் 1982 இல் கொண்டுவரப்பட்டது ஜனாதிபதி தனது முதலாலது பதவிக்காலத்தை 4 வருடங்களைப் பூர்த்தி செய்த பிறகு மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இத்திருத்தம் வகை செய்தது.

4ஆவது திருத்தம் 23 டிசெம்பர் 1982 இல் கொண்டுவரப்பட்டது பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பானது இந்த திருத்தம். 1982 டிசெம்பர் 12 ஆம் திகதி நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

5ஆவது திருத்தம் 25 பெப்ரவரி 1983 இல் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றத்தில் வெற்றிடமொன்று நிரப்பப்படாத பட்சத்தில் அதற்காக இடைத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு இந்த திருத்தம் ஏற்பாடு செய்தது.

6ஆவது திருத்தம் 8 ஆகஸ்ட் 1983 இல் கொண்டுவரப்பட்டது. இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாடு மீறப்படுவதைத் தடை செய்தல். இலங்கைக்குள் தனி அரசொன்றை உருவாக்குவதற்காக குரல் கொடுப்பதிலிருந்து பிரஜைகளை இந்த திருத்தம் தடுத்தது. 1983 கறுப்பு ஜூலை இன வன்முறைகளைத் தொடர்ந்து இந்த திருத்தம் கொண்டு வரப்பட்டதால் அது கடுமையான கண்டனத்திற்கு உள்ளானது.

7ஆவது திருத்தம் 4 அக்டோபர் 1983 இல் கொண்டுவரப்பட்டது. இந்த திருத்தம் மேல் நீதிமன்ற ஆணையாளர்கள் சம்பந்தப்பட்டது. அத்துடன் அது கிளிநொச்சி மாவட்டத்தையும் உருவாக்கியது. இதனுடன் சேர்த்து இலங்கையின் நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்தது.

8ஆவது திருத்தம் 6 மார்ச் 1984 இல் கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு ஜனாதிபதியின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன.

9ஆவது திருத்தம் 24 ஆகஸ்ட் 1984 இல் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியைக் கொண்டிராத அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பள மட்டங்களை சீர்செய்வதற்கான திருத்தம்.


10ஆவது திருத்தம் 6 ஆகஸ்ட் 1986 இல் கொண்டுவரப்பட்டது. பொதுப்பாதுகாப்பு ஒழுங்கு விதிகளின் கீழ் பிரகடனங்களை செய்வதற்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை என்ற பிரிவை இரத்து செய்வதறிக்கான திருத்தம்,

11ஆவது திருத்தம் 6 மே 1987 இல் கொண்டுவரப்பட்டது. முதற்தடவை செய்யப்படுகின்ற குற்றங்களைக் கையாளுவதற்கு மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்க அதிகாரங்களை சீர்திருத்துதல். மேல் நீதிமன்ற அமர்வுகள் தொடர்பில் மாற்றங்கள் செய்யப்பட்டன. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அமர்வில் இருக்க வேண்டிய நீதிபதிகளின் குறைந்தபட்ச எண்ணிக்கையைத் திருத்துதல்.

12ஆவது திருத்தம் 25 செப்டெம்பர் 1987 இல் கொண்டுவரப்பட்டது. இந்த திருத்தம் 1987 செப்டெம்பர் 25 ஆம் திகதி பிரேரிக்கப்பட்ட போதிலும் சட்டம் நுணுக்கம் சார்ந்த தவறுகள் காரணமாக நிறைவேற்றப்படவில்லை. நடைமுறையின் ஒழுங்கற்ற தன்மை காரணமாகத் திருத்தங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை பன்னிரண்டாவது திருத்தம் என்றே கணிக்கப்பட்டது. ஆனால், பன்னிரண்டாவது திருத்தம் என்ற ஒன்று உண்மையில் இல்லை என்றபோதிலும் 17 நவம்பர் 1987 நிறைவேற்றப்பட்ட அடுத்த திருத்தம் பதின்மூன்றாவது திருத்தம் என்று கணிக்கப்பட்டது.

13ஆவது திருத்தம் 14 நவம்பர் 1987 இல் கொண்டுவரப்பட்டது. தமிழையும் ஒரு உத்தியோகபூர்வ மொழியாகவும் ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் ஆக்குவதற்கும் மாகாணசபைகளை அமைத்து அவற்றிற்கு அதிகாரங்களைப் பரவலாக்கவும் இது வகை செய்தது. மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் அதிகாரங்களுக்கும் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. பொதுமக்கள் பொதுப்பாதுகாப்பு ஒழுங்கு விதிகளிலும் திருத்தங்கள் செய்யப்பட்டன.

14ஆவது திருத்தம் 24 மே 1988 இல் கொண்டுவரப்பட்டது. சட்டத்திலிருந்து ஜனாதிபதிக்கு இருந்து வந்த விலக்கீடு மேலும் நீடிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 125 ஆக உயர்த்தப்பட்டது. தேர்தல் மாவட்டங்களை தேர்தல் வலயங்களாகப் பிரிப்பதற்கான எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையும் மொத்த வாக்குகளில் 1/8 என்ற வெட்டுப்புள்ளியும் அறிமுகப்படுத்தப்பட்டது. 29 தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதற்கு வகை செய்யப்பட்டது.




(தொடர்ச்சி 22 பக்கம்)

இலங்கை செய்திகள்
Sri Lanka News
மன்னார் நிருபர்

# மன்னார் மாவட்டத்தில் இலவச மருத்துவ முகாமை முன்னெடுத்த நியூசிலாந்திலிருந்து வந்த குழுவினர் அரச அதிபருடன் கலந்துரையாடல்

## மேற்படி குழுவினருக்கு நன்றியும் தெரிவித்த அரசாங்க அதிபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (20-08-2026)



மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நியூசிலாந்து தேசத்தில் வசித்து வரும் ஜேம்ஸ் பத்மநாதன் பிரேம்குமார் தலைமையில் நியூசிலாந்து தேசத்தில் இருந்து வருகை தந்த மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் மன்னார் மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக இலவச மருத்துவ முகாம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் குறித்த குழுவினர் 20ம் தி-கதி அன்றைய தினம் வியாழக்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து உரையாடி உள்ளனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு அன்று வியாழக்கிழமை (20) விஜயம் செய்த குறித்த குழுவினரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மாலை அணிவித்து வரவேற்றார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நியூசிலாந்து தேசத்தில் வசித்து வரும் ஜேம்ஸ் பத்மநாதன் பிரேம்குமார் அவர்களின் குறித்த செயல்பாட்டை பாராட்டிய அரசாங்க அதிபர் புலம்பெயர் நாட்டில் வாழ்ந்து வரும் நிலையில் பிறந்த நாட்டையும், மாவட்டத்தையும் நேசித்து மன்னார் மாவட்ட மக்களுக்காக குறித்த நடவடிக்கையை மேற்கொண்ட மைக்காக குறித்த குழுவினருக்கு தனது நன்றியும் பாராட்டையும் தெரிவித்துள்ளார்.

குறித்த மூன்று நாட்கள் மேற்கொண்ட இலவச மருத்துவ முகாமில் பல நூற்றுக்கணக்கான மக்கள் பயனடைந்துள்ளனர். குறிப்பாக மாந்தை மேற்கில் மேற்கொள்ளப்பட்ட குறித்த மருத்துவ முகாம் ஊடாக பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்ற மக்கள் பலர் பயனடைந்துள்ளனர்.

பின்தங்கிய கிராம மக்களும் பயனடைந்துள்ளனர்.எனவே இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என அரச அதிபர் குறித்த குழுவினரிடம் தெரிவித்தார்.

குறித்த குழுவினர் மன்னார் உப்புக்குளம்,விடத்தல் தீவு மற்றும் அந்தோனியார் புரம் ஆகிய கிராமங்களில் கடந்த மூன்று நாட்களாக இலவச மருத்துவ முகாமை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்பாக இடம் பெற்ற மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா

## மூன்று பிரிவுகளில் 17 கலைஞர்கள் கௌரவிப்பு





எஸ்.ஆர்.லெம்பேட் (20-08-2026)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அழகின் அனுசரணையில் மன்னார் மாவட்ட செயலகமும், மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பேரவை யும் இணைந்து ஏற்பாடு செய்த மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழா 20ம் திகதி அன்று வியாழக்கிழமை காலை மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் இடம் பெற்றது. காலை 9.30 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தடியில் இருந்து பண்பாட்டு பேரணி ஆரம்பமானது.

குறித்த பேரணியில் மன்னார்,நானாட்டான்,முசலி,மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய கலை கலாச்சாரம் போன்ற வற்றை பிரதி பலிக்கும் வகையில் குறித்த கலாச்சார பேரணி இடம்பெற்றது.

குறித்த பேரணியானது மன்னார் மன்னார் பிரதான பாலத்தடியில் ஆரம்பமாகி மன்னார் நகரசபை மண்டபம் வரை சென்றது.

இதன் போது விருந்தினர்களாக கலந்து கொண்ட வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் கே.செல்வன், மனோன்மணி அறக்கட்டளை பிரதிநிதிகள் ஆகியோர் மாலை அணி விக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி. கிறிஸ்து நேசரத்தினம் அடிகளார் இந்து மத குரு தர்ம குமார குருக்கள் உள்ளடங்களாக அருட்தந்தையர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

அதனை தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் அமரர் செழுங்கலை வித்தகர் டொனால்ட் தேவதாசன் அல்மேடா அரங்கில் குறித்த நிகழ்வுகள் இடம் பெற்றது.

இதன் போது கலைஞர்களின் பாடல்,நடனம்,மங்கள நாத இசை சங்கமம்,குழு இசை, குழு நடனம்,களி கம்பு போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றது.

அதனை தொடர்ந்து மன்னொழில் (IV) சிறப்பு மலர் வெளியீடு இடம் பெற்றது.தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு இடம் பெற்றது. இதன் போது மூன்று பிரிவுகளில் ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி 17 கலைஞர்கள் கௌரவிக்கப் பட்ட மை குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'நூல்களின் சங்கமம்' கண்காட்சி

## வாசகர்களின் ஒன்று கூடலாகவும் திகழ்ந்தது!

எழுத்தாளர் ரவி கனகசபை அவர்களை தலைவராகக் கொண்டு இயங்கும் தற்போதைய கனடா எழுத்தாளர் இணையத்தின் இயக்குனர் சபையின் முழுமையான ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பெற்ற இவ்வருடத்திற்குரிய நூல்களின் சங்கமம்“ கண்காட்சி கடந்த 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன் கலா மண்டபத்தில் நடைபெற்ற போது ஆரம்ப நிகழ்ச்சிகள் கலந்து கொண்டவர்கள் அனைவரும் பாராட்டும் வகையில் அமைந்தன. அவ்வாறாக காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 6.00 மணிக்கு நிறைவுற்ற வேளையில் அன்றைய நூல்கண்காட்சியானது நூல்களின் காட்சிக் கூடமாக மட்டும் அல்ல. ஆர்வம் கொண்ட வாசகர்களின் அற்புதமான ஒன்று கூடலாகவும் திகழ்ந்தது!

36 எழுத்தாளர்களின் புத்தகச் சாவடிகளால் நிறைந்திருந்த அந்த மண்டபத்தில் பாரதியார் குறிப்பிட்டது போன்று ”ஆடுதல், பாடுதல், சித்திரம் - கவி யாதி யினைய கலைகளில் உள்ளம் ஈடுபட் டென்றும் நடப்பவர். பிறர் ஈன நிலைகண்டு துள்ளுவார் அவர் நாடும் பொருள்கள் அனைத்தையும் - சில நாளினில் எய்தப் பெறுகுவார்” என்ற கவி வரிகளுக்கு இணங்க இயல் - இசை - நாடகம் ஆகிய துறைகளில் பற்றுக் கொண்ட பலர் அன்றைய கண்காட்சியில் நடந்தும் அமர்ந்தும் உரையாடியும் நகைச்சுவைகளைப் பகிர்ந்தும் உலாவிய ஒரு இலக்கிய உற்சவமாக விளங்கியது என்றால் மிகையாகாது.

இன்னொரு பார்வையில் பேராசிரியர்களஇ தமிழாசிரியர், கவிஞர்கள், நாடகர்கள், சஞ்சிகை வெளியீட்டாளர்கள், எழுத்தாளர்கள், விரிவுரையாளர்கள் என்ற வகையினரோடு இளைய தலைமுறையைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் கல்வியில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள் மற்றும் சமூக நோக்கம் கொண்டவர்கள் என அவர்களும் அன்றை நூல் க ண்பாட்சி வெற்றிபெறுவதற்கு பல வழிகளிலும் உதவிகள் புரிபவர்களாக காணப்பட்டார்கள்.

பல எழுத்தாளர்களின் நூல்கள் அன்றைய மேடையில் வெளியிடப்பெற்ற அதே வேளையில் அவை பற்றிய விமர்சனங்கள் மற்றும் ஆய்வுகள் துறைசார்ந்த திறமை கொண்டவர்களினால் ஆற்றப்பெற்றன என்பது சிறப்புக்குரிய அம்சமாகப் பார்க்கலாம்.

விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதில் பங்களித்த மூன்றுக்கு மேற்பட்ட சகோதரிகள் தங்கள் பணிகளை நேர்த்தியாகச் செய்தார்கள்.

இந்த வருடத்தின் “நூல்களின் சங்கமம்“ மக்கள் மத்தியில் பேசப்படும் ஒரு முழுநாள் விழாவாகவும் காட்சி ஊடகங்களால் காட்டப்பெற்றமையும் எழுத்தாளர் இணையத்திற்கு கிட்டிய வெற்றி என்றே கூறலாம்.




























Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# வடக்கில் முதலீடு மற்றும் விவசாயம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என கனேடிய உயர்ஸ்தானிகரிடம் ஆளுநர் தெரிவிப்பு!



வடக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானம் மற்றும் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் போதியளவு நிதியை ஒதுக்கி செயற்பட்டு வருவதுடன், வடக்கு மாகாணத்தில் முதலீடு, விவசாய உற்பத்திக்கு பெறுமதி சேர்த்தல் ஆகிய துறைகளில் மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். அதேவேளை, வடக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதுடன், தமது கோரிக்கைகளுக்கான தீர்வுகள் விரைவாகக் கிடைக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இஷேபிள் மார்ட்டின் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இஷேபிள் மார்ட்டின் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு 20ம் திகதி அன்று (20.08.2026) வியாழக்கிழமை காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. சந்திப்பின்போது ஆளுநர், உயர்ஸ்தானிகரை அன்புடன் வரவேற்று, வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

இதன்போது, டித்வா பேரிடருக்குப் பின்னரான வடக்கு மாகாணத்தின் மீள்கட்டுமான நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பில் ஆளுநர் விரிவாக விளக்கமளித்தார். பாதிப்புகளுக்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்டுள்ள மீள்கட்டுமானப் பணிகளுக்கு அரசாங்கம் போதியளவு நிதியை ஒதுக்கியுள்ளதாகவும், அவற்றைத் தேவைக்கேற்ப தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டித்வா பேரிடர் காரணமாக வடக்கு மாகாணம் இழப்புகளை எதிர்கொண்டிருந்த போதிலும், மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசன முகாமைத்துவத்தின் பலனாக இம்முறை சிறுபோகத்தில் அதிகளவிலான நெல் விளைச்சலைப் பெற்றுள்ளதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார். அதிகரித்துள்ள நெல் உற்பத்தியை விவசாயிகளுக்கு பொருளாதாரப் பயனாக மாற்றுவதற்காக நெல் சந்தைப்படுத்தல் மற்றும் கொள்வனவு தொடர்பான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் கிடைக்கப்பெறும் விவசாய உற்பத்திகளை மூலப்பொருட்களாக மாத்திரம் சந்தைப்படுத்தாமல், அவற்றைப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக மாற்றி சந்தைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் மற்றும் வாய்ப்புகள் இன்னமும் போதியளவில் உருவாக்கப் படாத நிலை காணப்படுவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். இந்தத் துறையில் முதலீடுகளை ஈர்ப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள மூன்று முதலீட்டு வலயங்கள் தொடர்பான முன்னேற்றங்களையும் ஆளுநர், உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்தார். இவ்வலயங்கள் மாகாணத்தின் முதலீட்டு சூழலை விரிவுபடுத்துவதற்கும் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பங்களிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் சமகால சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் இருதரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு, செம்மணி விவகாரம், வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புத் தரப்பினரால் பயன்படுத்தப்பட்டு வரும் காணிகளை விடுவிக்கும் செயன்முறை, காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி, நல்லிணக்க முயற்சிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் உயர்ஸ்தானிகர் ஆளுநருடன் கலந்துரையாடினார்.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளை விடுவிக்கும் செயன்முறை தொடர்பில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு நேரில் சென்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதுடன், அதன் தொடர்ச்சியாக கொழும்பிலும் தொடர் நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக ஆளுநர் தெரிவித்தார். இதன்மூலம் காணி விடுவிப்பு தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக இந்தியா - இலங்கை இடையிலான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை இரண்டு கட்டங்களாக அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். இதன்படி முதல்கட்டமாக விமான நிலைய முனையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அடுத்த கட்டத்தில் ஓடுபாதை விரிவாக்கம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் விளக்கமளித்தார்.

மேலும், கடந்த காலங்களில் விமான நிலைய விரிவாக்கத்துக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளுக்கான இழப்பீடுகளை சுமார் 40 ஆண்டுகளுக்குப் பின்னரும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் மீண்டும் நாட்டுக்கு வருவதற்கான சில தடைகள் நீக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஆளுநர் குறிப்பிட்டார். அதேவேளை, புலம்பெயர் தமிழர்கள் எவ்வித அச்ச உணர்வுமின்றி நாட்டுக்கு வந்து செல்லக்கூடிய சூழல் தற்போது உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய மட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த சில நிறுவனங்களிலும் தீர்மானம் மேற்கொள்ளும் உயர்நிலைப் பதவிகளிலும் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தலைமைத்துவப் பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டு வருவது தொடர்பிலும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக நிதி ஆணைக்குழு மற்றும் பெறுகை நடைமுறைக் குழு போன்ற முக்கிய தேசிய அமைப்புகளில் இவ்வாறான பிரதிநிதித்துவம் இடம்பெறுவதாக அவர் குறிப்பிட்டார்.

கனடாவில் வசிக்கும் தமிழ் மக்கள் மற்றும் கனேடிய முதலீட்டாளர்கள் வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். முதலீடு, தொழில் முயற்சி, அறிவு மற்றும் தொழில்நுட்பப் பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு வழிகளில் வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்

# செம்மணி மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறைவு பெற்றன

## இதுவரை 583 மனித எலும்புத் தொகுதிகள் மீட்பு!

## நான்காம் கட்டம் குறித்து ஒக்டோபர் 14 இல் முடிவெடுக்கப்படும்!

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் 19ம் திகதி புதன்கிழமையன்று நிறைவுக்கு வந்துள்ள நிலையில், நான்காம் கட்ட அகழ்வுப் பணிகள் குறித்த இறுதித் தீர்மானம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நிர்வாகக் கலந்துரையாடலில் எடுக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இறுதி நாளான 56 ஆவது நாள் அகழ்வு 19ம் திகதி இடம்பெற்றது. இதன்போது, புதிதாக ஒரு மனித எலும்புத் தொகுதி அடையாளம் காணப்பட்டதோடு, ஏற்கனவே அடையாளம் 9 மனித எலும்புத் தொகுதிகளுடன் மொத்தமாக 10 மனித எலும்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.


இதன்மூலம், செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை மொத்தம் 583 மனித எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளன. கடைசி அகழ்வின்போது எலும்பு எச்சங்கள் குவியலாகவும் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டு நீதிமன்றக் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், 19ம் திகதி அன்றைய தினத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் சில சான்றுப் பொருள்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, விரல் எலும்புத் தொகுதியிலிருந்து ஒன்றோடு ஒன்று இணைந்தவாறு செப்பிலான மூன்று மோதிரங்களும், கழுத்து எலும்புப் பகுதியிலிருந்து அட்சரக்கூடு ஒன்றும், நாணயக் குற்றி ஒன்றும் என மூன்று சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டு நீதிமன்றக் கட்டுக்காவலில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 56 நாள்களைக் கொண்ட செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவு பெற்றுள்ளன. இதுவரை இந்தப் புதைகுழியிலிருந்து குவியல்களாக 51 மனித எச்சக் குவியல்களும், மொத்தம் 170 சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி சட்டத்தரணிகளுக்கும் அகழ்வுப் பணியில் ஈடுபடும் நிபுணர் குழுவினருக்கும் இடையே நடைபெறவுள்ள நிர்வாக ரீதியான கலந்துரையாடலைத் தொடர்ந்தே, நான்காம் கட்ட அகழ்வுப் பணிகள் குறித்த இறுதி முடிவு அறிவிக்கப்படும்.

# வீட்டுத்திட்ட மிகுதி கொடுப்பனவை வழங்குமாறு யாழ்ப்பாணம் — வலிகாமம். மேற்கில் போராட்டத்தில் குதித்த மக்கள்!





வீட்டுத்திட்ட மிகுதி நிதியை வழங்குமாறு கோரி கடந்த 17ம் திகதி அன்றையதினம் அராலி மத்தி பகுதி மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சியின்போது 2018 மற்றும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் சஜித் பிரேமதாசவினால் இந்த வீட்டுத் திட்டமானது வழங்தப்பட்டது. குறித்த வீட்டுத்திட்டத்தின் மொத்த நிதியானது ஐந்து இலட்சம் என்று கூறப்பட்டாலும் முழுமையான நிதி பயனாளிகளை சென்றடையாத காரணத்தினால் இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டமானது சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு முன்பாக ஆரம்பமானது. இவ்வாறு ஆரம்பமான போராட்டம் சங்கானை பிரதான பேருந்து நிலையம் வரை பேரணியாக நகர்ந்தது. அதனை தொடர்ந்து பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மக்கள் தமது கோரிக்கைகளை பதாகைகளாக தாங்கி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து சங்கானை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் மற்றும் உதவித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரிடம் மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கையளித்தனர். அந்த மகஜர்கள் பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த போராட்டத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உப தவிசாளர் கந்தையா இங்கேஸ்வரன், பிரதேச சபையின் உறுப்பினர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இவ்வார ராசிபலன்

**21-08-2026 வெள்ளி தொடக்கம் 27-08-2026 வியாழன் வரையும்**



ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமான் கோவில்ரயில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +91778894666





**மேஷம்:** உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரித்து வாழ்க்கையில் புதிய முன்னேற்றங்களை காணும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் உங்கள் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டையும் புதிய பொறுப்புகளையும் பெறும் வாய்ப்பு உள்ளது. நீண்ட நாட்களாக தாமதமாக இருந்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத வருமானமும் மனநிம்மதியையும் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் ஒற்றுமையும் அதிகரித்து குடும்ப உறவுகள் வலுப்படும். பிள்ளைகளின் சாதனைகள் பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். காதல் உறவுகளில் நல்ல புரிதல் உருவாகி, மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். போதுமான ஓய்வும் சத்தான உணவும் அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,9

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வாரம் மேஷத்திற்கு 9/10 மதிப்பெண்




**ரிஷபம்:** நிதானமும் விடாமுயற்சியும் உங்கள் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை உருவாக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைத்து, புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த பணிகள் வெற்றிகரமாக நிறைவேறும். பணவரவு திருப்திகரமாக இருந்து, பழைய பாக்கிகள் வசூலாகி நிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் வலுப்படும். உறவினர்களின் ஆதரவும் நண்பர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். காதல் உறவுகளில் நல்ல மாற்றங்கள் உருவாகி, எதிர்காலம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், உணவுப் பழக்கத்தில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் முழு கவனத்துடன் செயல்பட்டு எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவார்கள். செலவுகளை கட்டுப்படுத்தி திட்டமிட்டு செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல பலன்களை அனுபவிப்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 2,6

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன். இந்த வாரம் ரிஷபத்திற்கு 8.5/10 மதிப்பெண்




**மிதுனம்:** புத்திசாலித்தனமும் சுறுசுறுப்பும் உங்களை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து, உங்கள் திறமையை நிரூபிக்கும் சந்தர்ப்பங்கள் உருவாகும். மேலதிகாரிகளின் பாராட்டும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பணவரவு சீராக இருந்து, எதிர்பாராத லாபமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே நல்ல புரிதல் உருவாகி, உறவு மேலும் வலுப்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். காதல் உறவுகளில் இருந்த குழப்பங்கள் நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக அலைச்சலால் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுத்தால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 5,9

அதிர்ஷ்ட நாள்: புதன், ஞாயிறு. இந்த வாரம் மிதுனத்திற்கு 9/10 மதிப்பெண்




**கடகம்:** மனநிம்மதியும் குடும்ப மகிழ்ச்சியும் அதிகரிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைத்து, புதிய பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த காரியங்கள் சாதகமாக முடிவடைந்து மன நிறைவை தரும். பணவரவு சீராக இருந்து, தேவையான செலவுகளை எளிதாக சமாளிப்பீர்கள். குடும்பத்தில் அமைதியும் ஒற்றுமையும் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி உறவு மேலும் வலுப்படும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், செரிமானம் மற்றும் வயிறு தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். பொறுமையுடனும் நிதானத்துடனும் செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம்பச்சை. அதிர்ஷ்ட எண்: 2,7

அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன். இந்த வாரம் கடகத்திற்கு 8.5/10 மதிப்பெண்.




**சிம்மம்:** தன்னம்பிக்கையும் தலைமைத்துவ திறமையும் உங்களுக்கு பெரிய வெற்றிகளைத் தேடித்தரும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முன்னேற்றங்கள் உருவாகி, உங்கள் உழைப்புக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், புதிய பொறுப்புகளும் கிடைக்கக்கூடும். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத வருமானம் மனநிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடைபெற வாய்ப்புள்ளது. கணவன்-மனைவி இடையே ஒற்றுமை அதிகரித்து, குடும்ப உறவுகள் வலுப்படும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் கிடைக்கும். காதல் உறவுகளில் இனிமையான மாற்றங்கள் உருவாகி, எதிர்காலம் குறித்த நல்ல முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பிரச்சினைகள் இருக்காது என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு ஏற்படலாம். ஓய்வுக்கும் உடற்பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கி போட்டித் தேர்வுகளில் வெற்றிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். தற்பெருமையைத் தவிர்த்து அனைவருடனும் இணக்கமாக நடந்துகொண்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்.

அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள், ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,3

அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய். இந்த வாரம் சிம்மத்திற்கு 9/10 மதிப்பெண்




**கன்னி:** திட்டமிட்ட செயல்பாடும் புத்திசாலித்தனமான முடிவுகளும் உங்களுக்கு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த வாய்ப்புகள் கிடைத்து, உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். புதிய பொறுப்புகளை திறமையாக கையாண்டு நல்ல பெயரைப் பெறுவீர்கள். பணவரவு சீராக இருந்து, சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை அளிக்கும். காதல் உறவுகளில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு, நம்பிக்கை மேலும் வலுப்படும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், வேலைப்பளுவால் உடல் சோர்வு மற்றும் முதுகு வலி ஏற்படலாம். போதுமான ஓய்வும் சத்தான உணவும் அவசியம். மாணவர்கள் கல்வியில் முழு கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த வெற்றியைப் பெறுவார்கள். அவசர முடிவுகளைத் தவிர்த்து நிதானமாக செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 5,6

அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி. இந்த வாரம் கன்னிக்கு 8.5/10 மதிப்பெண்




**துலாம்:** சமநிலையும் தெளிவான சிந்தனையும் உங்களை வெற்றிப் பாதையில் முன்னேற்றும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முன்னேற்றங்கள் உருவாகி, தடைபட்டிருந்த முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். உங்கள் பேச்சுத்திறமையால் முக்கியமான நபர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமையும் அன்பும் அதிகரிக்கும். உறவினர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் அதிகரிக்கும். காதல் உறவுகளில் இருந்த மனவருத்தங்கள் நீங்கி, நல்ல புரிதல் உருவாகும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், மன அழுத்தத்தைத் தவிர்த்து போதுமான தூக்கத்தை கடைபிடிப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். பொறுமையுடனும் நிதானத்துடனும் செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல வாய்ப்புகள் உங்கள் வாழ்க்கையில் அமையும்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம், வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 6,9

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி. இந்த வாரம் துலாமிற்கு 9/10 மதிப்பெண்




**விருச்சிகம்:** உறுதியான மனப்பான்மையும் தன்னம்பிக்கையும் உங்களை வெற்றியின் உச்சிக்குக் கொண்டு செல்லும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முன்னேற்றங்கள் உருவாகி, நீண்ட நாட்களாக காத்திருந்த வாய்ப்புகள் சாதகமாக அமையும். உங்கள் உழைப்புக்கு மேலதிகாரிகளின் பாராட்டும், முக்கியமான பொறுப்புகளும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து நிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் வலுப்படும். பிள்ளைகளின் சாதனைகள் பெருமையை ஏற்படுத்தும். காதல் உறவுகளில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி, உறவு மேலும் வலுவடையும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வையும் சீரான உணவுப் பழக்கத்தையும் கடைபிடியுங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகரிக்கும். கோபத்தை தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: அடர் சிவப்பு, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 9,3

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன். இந்த வாரம் விருச்சிகத்திற்கு 9/10 மதிப்பெண்




**தனுசு:** அதிர்ஷ்டமும் புதிய வாய்ப்புகளும் உங்களை முன்னேற்றப் பாதையில் வேகமாக அழைத்துச் செல்லும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி கிடைத்து, புதிய முயற்சிகள் நல்ல பலனைத் தரும். உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைத்து, முக்கியமான நபர்களின் ஆதரவும் கிடைக்கும். வெளிநாடு அல்லது தொலைதூரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான தகவல்கள் வரக்கூடும். பணவரவு சீராக இருந்து, சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமையும் மனநிறைவும் கிடைக்கும். காதல் உறவுகளில் இனிமையான மாற்றங்கள் ஏற்பட்டு, எதிர்காலம் குறித்த நல்ல முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பிரச்சினைகள் இருக்காது என்றாலும், அதிக அலைச்சலால் உடல் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வை கடைபிடிப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் முழு கவனத்துடன் செயல்பட்டால் எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவார்கள். தன்னம்பிக்கையுடனும் நிதானத்துடனும் செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல மாற்றங்களை அனுபவிப்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், ஊதா. அதிர்ஷ்ட எண்: 3,7

அதிர்ஷ்ட நாள்: வியாழன், ஞாயிறு. இந்த வாரம் தனுசுக்கு 9/10 மதிப்பெண்

(தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1210



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## திருமங்கலாய் சிவன் கோவில்
## திருக்கரைசையம்பதி, திருகோணமலை

திருகோணமலை, திராவிட மக்களாகிய தமிழர்களின் தொன்மையான வாழ்விடமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்திலுள்ள கோவில்களுள் பலவும் மன்னர்களால் கட்டப்பட்டு மானியங்கள் வழங்கப்பட்டு சிறப்போடு பேணப்பட்டது. திருகோணமலையைச் சார்ந்த பல கிராமங்கள், தமிழ் மக்கள் மட்டுமே வாழ்ந்த கிராமங்களாகக் காணப்பட்டு, பேரினவாதிகளால் திட்டம்போட்டு தமிழர்களுடைய வாழ்விடங்கள் அழிக்கப்பட்டும், குடியேற்றத்திட்டங்களாக மாற்றப்பட்டும் வருவது கண்கூடு. இவ்வாறான பல சைவத்தமிழ் கிராமங்கள் தமிழ்மக்கள் வாழ்ந்த சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் காணப்பட்ட சைவக் கோவில்களும் குண்டுவீச்சுகளுக்கு இலக்காகி அழிந்துள்ளன.

தற்காலத்தில் நிகழும் இன அழிப்புப் போரின் காரணமாக சம்பூர், மூதூர், கொட்டியாரப்பற்று போன்ற கிராமங்களிலிருந்த தமிழ்மக்கள் வெளியேறியும், வெளியேற்றப்பட்டும் காணப்படுகின்றார்கள். இப்பிரதேசங்களிலுள்ள ஆலயங்கள் தீபமேற்றுவாரின்றி அழிவைநோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. குண்டு வீச்சுக்களின் காரணமாக திருகோணமலைக்கிராமங்களிலுள்ள ஆலயங்கள் அழிந்துள்ளன. எஞ்சிய ஆலயங்களிலும் தீபமேற்றும் சந்தர்ப்பம் இல்லாது மக்கள் வெளியேறியுள்ளனர். ஆலயங்களில் தீபமேற்றச் சந்தர்ப்பம் கிடைக்காத நாடு, நாளடைவில் துன்பத்தைநோக்கிச் சென்று, காலகதியில் அழிந்து சின்னாபின்னமாவிடும் என ஆன்றோர் கூறியுள்ளனர். இவ்வாறான ஒரு நிலையை இன்று ஈழம் எதிர்நோக்கியுள்ளது..

திருகோணமலையைச் சார்ந்துள்ள கிராமங்களின் பெயர்களை நோக்கும்போது அரிய தமிழ்ப்பெயர்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் என்பதிலுள்ள திருமங்கலம் என்பது, அரசர்களோடு தொடர்புடைய சொற்பதமாகவும், மங்கலம் என்பது சிவனைக் குறிப்பதாகவும் காணப்படுகின்றது. அரசர்களால் அமைக்கப்பட்ட சிவன்கோவில் இருந்த இடத்திற்கு திருமங்கலாய் என்ற காரணப் பெயர் ஏற்பட்டிருக்கலாமோவென்ற எண்ணமும், அதன் பெயர் அமைவும் வியப்பளிப்பதாகக் காணப்படுகின்றது.

திருமங்கலாய் சிவன்கோவில் அமைந்துள்ள கொட்டியாரப்பற்றிலுள்ள கிராமங்களின் சரித்திரப்பின்னணிகளையும், அங்கேயிருந்து அழிந்துபோன ஆலயங்களின வரலாறுகளை ஆராயும்போது, திருக்கரைசையம்பதியை மத்திய ஸ்தானமாகக் கொண்ட ஒரு சைவசாம்ராச்சியமே இங்கிருந்து கோலோச்சி மறைந்துவிட்டதைக் காணமுடியும்.

திருமங்கலாய் சிவன்கோவிலின் அமைவு இதற்கொரு சான்றாகக் காணப்படுகின்றது. கிளிவெட்டியிலிருந்து திருமங்கலாய்க்குப் போகும் மார்க்கத்தில் நாலு கிலோமீற்றர் தூரத்தில் காட்டுப்பாதையினூடாக இக்கோவில் காணப்படுகின்றது. தற்போது இந்த ஆலயம் பெரும்பாலும் அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகம் சிதைந்துள்ளது. அர்த்தமண்டபம் சிதைந்தநிலையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. மகாமண்டபமும் மற்றும் ஆலயக் கட்டிடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன. இவ்வாலயத்தின் அத்திவாரத்தை நோக்கும்போது, பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டுக் காணப்படுகின்றது.

இக்கோவிலின் கட்டிட அமைப்பு முறையை ஆராயுமிடத்த, இவ்விடத்திலே மிகப் பெருங்கோவிலொன்று காணப்பட்டு அழிந்தமைக்கான சுவடுகள் காணப்படுகின்றன.

இக்கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் அனைத்தும் கொண்டு அமைந்திருந்ததோடு, இவ்வாலயம் சிறப்பான நிலையில் இருந்தமைக்கான சான்றாக, இவ்வாலயத்திற்கான தலபுராணம் காணப்படுகின்றது. தலபுராணம் பாடப்பட்ட ஆலயங்கள் பிரசித்தியும், மகத்துவமும் பெற்ற ஆலயங்களாகவே காணப்பட்டுள்ளன. இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட இவ்வாலயம், எவ்வாறு அழிந்ததென்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

மிகப்பெரும் ஆலயங்கள் செல்வச் செழிப்போடு இருந்துள்ளன. இவ்வாறான ஆலயங்களைத் தேடிப்பிடித்த அந்நியர், அச்வாலயங்களைக் கொள்ளையடித்தும், அழித்ததுமான செயல்களை வரலாறுகளிலே காணலாம். இரு இனங்களுக்கிடையே காலங்காலமாக நடைபெறும் உள்நாட்டு யுத்தங்களும், இவ்வாறான பெருங்கோவில்களை இடித்தழிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு விளங்கியுள்ளன.

தற்கால அரசியல் சூழ்நிலையும் இவ்வாறான இடங்களுக்குச் செல்வதை தடை செய்துள்ளன. இப்பிரதேசங்களிலே வாழ்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வேறிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை நிலவுகின்றது. ஐதீகக் கதைகளையும், வாய்மொழி வரலாறுகளையும் தம்முள் தேக்கிவைத்திருக்கும் பெரியவர்கள், காலவோட்டத்தில் மறைந்தும், மறந்தும் காணப்படுகின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் திருமங்கலாய் சிவன் கோவிலின் அழிவு, எவ்வாறு நிகழ்ந்தது என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது.

**வளரும்..**



## இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**மகரம்:** கடின உழைப்புக்கு உரிய அங்கீகாரமும் நல்ல முன்னேற்றமும் கிடைக்கும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கி, புதிய வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெற்று முக்கியமான பொறுப்புகளை ஏற்கும் சூழ்நிலை உருவாகும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைத்து நிம்மதியை அளிக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் வலுப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையையும் மகிழ்ச்சியையும் தரும். காதல் உறவுகளில் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டு, உறவு மேலும் உறுதியாகும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு அல்லது மூட்டு வலி ஏற்படலாம். ஓய்வுக்கும் உடற்பயிற்சிக்கும் நேரம் ஒதுக்குவது நல்லது. மாணவர்கள் கல்வியில் முழு கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த வெற்றியைப் பெறுவார்கள். பொறுமையுடனும் திட்டமிட்ட செயல்பாட்டுடனும் நடந்துகொண்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: அடர் நீலம், பச்சை. அதிர்ஷ்ட எண்: 8,4

அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி. இந்த வாரம் மகரத்திற்கு 9/10 மதிப்பெண்




**கும்பம்:** புதிய சிந்தனைகளும் எதிர்பாராத நல்ல வாய்ப்புகளும் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வெற்றியடைந்து, உங்கள் திறமை அனைவராலும் பாராட்டப்படும். மேலதிகாரிகளின் ஆதரவும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் மன உற்சாகத்தை அதிகரிக்கும். பணவரவு சீராக இருந்து, சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும். கணவன்-மனைவி இடையே நல்ல புரிதல் உருவாகி உறவு மேலும் வலுப்படும். நண்பர்கள் மற்றும் உறவினர்களால் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். காதல் உறவுகளில் நெருக்கம் அதிகரித்து, எதிர்காலம் பற்றிய நல்ல முடிவுகள் எடுக்கப்படலாம். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு இருக்காது என்றாலும், தூக்கமின்மை மற்றும் மன அழுத்தத்தைத் தவிர்க்க போதுமான ஓய்வு அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுத்தால் இந்த வாரம் பல நல்ல மாற்றங்களை அனுபவிப்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம், ஊதா. அதிர்ஷ்ட எண்: 4,8

அதிர்ஷ்ட நாள்: சனி, புதன். இந்த வாரம் கும்பத்திற்கு 9/10 மதிப்பெண்




**மீனம்:** அதிர்ஷ்டமும் மனநிம்மதியும் ஒன்றாக இணைந்து பல நல்ல மாற்றங்களை தரும் வாரமாக இந்த வாரம் அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் உங்கள் முயற்சிகளுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைத்து, புதிய வாய்ப்புகள் உருவாகும். நீண்ட நாட்களாக தடைபட்டிருந்த காரியங்கள் சாதகமாக முடிவடைந்து மனநிறைவை அளிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், சக ஊழியர்களின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, எதிர்பாராத வருமானமும் கிடைத்து பொருளாதார நிலை வலுப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் மேலும் வலுப்படும். பிள்ளைகளின் சாதனைகள் பெருமையையும் மன மகிழ்ச்சியையும் தரும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கி உறவு இனிமையாக மாறும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக சிந்தனையால் மன சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம். போதுமான ஓய்வும் தியானமும் மன அமைதியை அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறுவார்கள். தன்னம்பிக்கையுடனும் பொறுமையுடனும் செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்.

அதிர்ஷ்ட நிறம்: கடல் பச்சை, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 3,7

அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள். இந்த வாரம் மீனத்திற்கு 9/10 மதிப்பெண்

(15 பக்கத் தொடர்ச்சி)

## அரசியலமைப்பு திருத்தங்களும் ஆட்சியாளரின் அதிகார சதுரங்கமும்

15ஆவதுதிருத்தம் 17 டிசெம்பர் 1988 இல் கொண்டுவரப்பட்டது. தேர்தல் வலயங்களை இல்லாதொழிப்பதற்கு அரசியலமைப்பின் 96 ஏ சரத்து நீக்கப்பட்டது.

16ஆவது திருத்தம் 17 டிசெம்பர் 1988 இல் கொண்டுவரப்பட்டது சிங்களத்தையும் தமிழையும் நிர்வாக மற்றும் சட்டவாக்க மொழிகளாக மாற்றுவதற்கான ஏற்பாடு கொண்டது.

17ஆவது திருத்தம் 3 அக்டோபர் 2001 இல் கொண்டுவரப்பட்டது. அரசியலமைப்பு பேரவையையும் சுயாதீன ஆணைக்குழுக்களையும் கொண்டு வருவதற்கான ஏற்பாடு. தேர்தல் ஆணைக்குழு, நீதிச்சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு ஆகியவையும் இதில் உள்ளடங்கும். ஜனாதிபதியால் செய்யப்படுகின்ற நியமனங்களுக்கும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

18ஆவது திருத்தம் 8 அக்டோபர் 2010 இல் கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதிக்கு இருந்த இரு பதவிக்கால மட்டுப்பாடு நீக்கப்பட்டது. தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றிற்கும் உறுப்பினர்கள் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் போன்ற சுயாதீனமான பதவிகளை நியமிப்பதற்கும் ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டன.

19ஆவது திருத்தம் 28 ஏப்ரல் 2015 இல் கொண்டுவரப்பட்டது. பதினெட்டாவது திருத்தத்தை இரத்து செய்து சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கும் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கும் கொண்டு வரப்பட்ட பதினேழாவது திருத்தத்தின் ஏற்பாடுகள் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டன. ஜனாதிபதி அரச தலைவராக, அமைச்சரவையின் தலைவராக, பாதுகாப்புப் படைகளின் தலைவராகத் தொடர்ந்து செயற்படுகின்ற அதேவேளை, அவரது பதவிக்காலம் 5 வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

20ஆவது திருத்தம் 22 செப்டெம்பர் 2020இல் கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அன்றைய தினமே முதலாவது வாசிப்பும் நிறைவேறியது. இது பத்தொன்பதாவது திருத்தத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் கொண்டு வருவதற்கும் அதற்கு மேலும் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி பாராளுமன்றத்தின் அதிகாரங்களைக் குறைக்கும், பத்தொன்பதாவது திருத்தத்தின் பிறகு கணிசமான அதிகாரங்களைக் கொண்டதாக இருந்து வந்த பிரதமர் பதவி மீண்டும் பழைய நிலைமைக்கே செல்லக்கூடிய ஏற்பாடுகளை இந்த திருத்தம் கொண்டிருந்தது.

21ஆவது திருத்தம் 21 ஒக்டோபர் 2022 இல் கொண்டு வரப்பட்டது. 20ஆவது திருத்தத்தைக் குறைத்து, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி பாராளுமன்றத்தை பலப்படுத்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஊழலற்ற புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதாக வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம், தற்போது 22 ஆவது திருத்தத்தின் மூலம் அதே சர்ச்சைக்குரிய புயல்மையத்தில் மையம் கொண்டுள்ளது. கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட 21 திருத்தங்களும் எதனைப் போதித்தன என்பதை அநுரகுமார அரசாங்கம் மறந்துவிடக் கூடாது. மக்கள் மாற்றத்தை விரும்பியே புதிய ஆட்சியைத் தேர்ந்தெடுத்தனர். மகா சங்கத்தினர், சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளின் நியாயமான ஐயங்களை புறந்தள்ளிவிட்டு, 22 ஆவது திருத்தத்தை அவசரகதியில் முன்னெடுப்பது மீண்டும் ஒரு பழைய தவறான முன்மாதிரிக்கே வழிவகுக்கும்.

இலங்கையின் அரசியலமைப்பு வரலாறு என்பது திருத்தங்களினாலும், அதனால் விளைந்த அரசியல் கொந்தளிப்புகளினாலும் நிரம்பியது. 22 ஆவது திருத்தம் என்பதும் அந்த நீண்ட பட்டியலில் மற்றொரு எண்தானே தவிர, அதுவே இறுதி தீர்வாகிவிட முடியாது. அதிகாரத்தில் இருப்பவர்கள் மாறலாம்.ஆனால் சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் சுயாதீனமும் என்றும் மாறாத தூண்களாக இருக்க வேண்டும். 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மக்களின் நம்பிக்கையை வெல்லுமா அல்லது மீண்டும் ஒரு அரசியல் ஸ்திரமின்மைக்கு வித்திடுமா என்ற கேள்விக்கான பதில், ஆட்சியாளர்கள் இந்த விமர்சனங்களை எவ்வாறு கையாளப்போகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது.

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் அறிவித்தல்

### பொதுக் கூட்டம்

அன்புடையீர்,

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் 13.09.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற உள்ளது. நிகழ்வு இடம்பெறும் இடம் பற்றிய விபரங்களை பின்னர் அறியத் தருவோம். பொதுக் கூட்டத்தில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இணையத்தின் அங்கத்தவர்கள், நிர்வாகசபை உறுப்பினர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு இறுதித் திகதி 03.09.2026. நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை அனுப்ப விரும்புவோர் தலைவர் அல்லது செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

ஆயுட்கால அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்கள் அடுத்த ஆண்டுக்கான அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கான இறுதித் திகதி 12.09.2026 ஆகும்.

kana-ravi@hotmail.com

vasuki.nakularajah@gmail.com

**அன்புடன் தலைவர் - ரவி கனகசபை: (416) 301-9027**


**செயலாளர் - வாசுகி நகுலராஜா: (647) 208-4148**

**பொருளாளர் - இராஜ்குமார் குணரட்ணம்**



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank
First National Financial LP
TD Canada Trust
Manulife
National Bank
Desjardins
RFA
MCAP
Home Trust
Equitable Bank
radius financial
RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்




உதயம் 1585 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 21, 2026



## கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் "நூல்களின் சங்கமம்" கண்காட்சி வாசகர்களின் ஒன்று கூடலா –கவும் திகழ்ந்தது!

எழுத்தாளர் ரவி கனகசபை அவர்களை தலைவராகக் கொண்டு இயங்கும் தற்போதைய கனடா எழுத்தாளர் இணையத்தின் இயக்குனர் சபையின் முழுமையான ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பெற்ற இவ்வருடத்திற்குரிய நூல்களின் சங்கமம்" கண்காட்சி கடந்த 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன் கலா மண்டபத்தில் நடைபெற்ற போது ஆரம்ப நிகழ்ச்சிகள் கலந்து கொண்டவர்கள் அனைவரும் பாராட்டும் வகையில் அமைந்தன. அவ்வாறாக காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 6.00 மணிக்கு நிறைவுற்ற வேளையில் அன்றைய நூல்கண்காட்சியானது நூல்களின் காட்சிக் கூடமாக மட்டும் அல்ல. ஆர்வம் கொண்ட வாசகர்களின் அற்புதமான ஒன்று கூடலாகவும் திகழ்ந்தது!

(தொடர்ச்சி ம் 17 பக்கம்)

## சுருவில் மக்கள் ஒன்றியம் நடத்திய கோடைகால ஒன்றுகூடல் – 2026 சிறப்பாக நடைபெற்றது



கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் சுருவில் மக்கள் ஒன்றியம் நடத்திய கோடைகால ஒன்றுகூடல்-2026 கடந்த சனிக்கிழமை 15ம் திகதி ஸ்காபுறோவில் உள்ள பூங்கா ஒன்றில் சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றியத்தின் நிர்வாக சபை உறுப்பினர் அனைவரும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த ஒன்றுகூடலில் காலை தொடக்கம் மக்கள் ஒன்றுகூடி உரையாடி மகிழ்ந்து பின்னர் உணவு மற்றும் சிற்றுண்டிகளையும் அருந்தினர். சிறுவர் ,இளைஞர்கள் மற்றும் பெரியோர் ஆகியோருக்கான பொழுது போக்கு நீகழ்ச்சிகளும் நடத்தப்பெற்று பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்பெற்றன.





## ஸ்காபுறோ மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம் நடத்திய "ஆடிப்பூர உற்சவம்" சிறப்பாக நடைபெற்றது



ஸ்காபுறோ நாஸ்டின் வீதியில் அமைந்துள்ள மேல்மருவத்துார் ஆதிபராசக்தி குருமன்றம் 16-08-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்திய “ஆடிப்பூர உற்சவம்” சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் நிறுவனர் சக்தி ஞானம்மா அவர்கள் சிறப்புரையாற்றியதைத் தொடர்ந்து கஞ்சிக் கலசங்களை ஏந்திய வண்ணம் சக்திகள் பலர் ஆலய வளாகத்தை சுற்றி வந்து தரிசனம் செய்த பின்னர் அன்னதானம் இடம்பெற்றது. மேற்படி ஆலயத்தில் வருடாந்தம் இடம்பெறும் இந்த ஆடிப்பூர உற்சவத்தை மன்றத்தின் சக்திகள் அனைவரும் இணைந்து உணர்வுபூர்வமாக நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## BEHIND ME MEDIA நிறுவனம் நடத்திய COMMUNITY SUMMER B.B.Q நிகழ்வில் மிசிசாகா பகுதியின் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்

20ம் திகதி வியாழக்கிழமையன்று பிற்பகல் மிசிசாகா நகரில் தலைமை அலுவலகம் அமைந்தள்ள ***BEHIND ME MEDIA*** நிறுவனம் நடத்திய ***COMMUNITY SUMMER B.B.Q*** நிகழ்வில் மிசிசாகா பகுதியின் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். மத்திய, மாகாண மற்றும் நகராட்சி மன்றத்தின் மேயர் மற்றும் கவுன்சிலர்கள் என பலர் கலந்து சிறப்பித்த இந்த நிகழ்வை ***BEHIND ME MEDIA*** அதிபர் கனேந்திரன் செல்வராஜா அவர்கள் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். மேற்படி நிகழ்வின் மூலம் மேற்படி அரசியல்வாதிகள் தங்கள் சேவை நோக்கங்களை சமூக ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு தெரியப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே காணப்படும் படத்தில் மிசிசாகா நகரத்தின் தற்போதைய மேயர் ***CAROLYN PARISSH*** அவர்கள் கனேந்திரன் செல்வராஜா அவர்களுக்கு நகரசபையின் சார்பான பாராட்டுப் பத்திரம் ஒன்றை வழங்குதைக் காணலாம்.

